ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள் தோறும் வெளிவருவது

சிலம்பு ௪ | மெய்கண்டான் யாண்டு-௭௱௩ ஆடித்திங்கள் 1926௵ ஜூலை௴—ஆகஸ்டு௴ | பரல் ௭

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இறையனாரகப் பொருள்

[கா. சுப்பிரமணியப் பிள்ளை M. A., M. L.]

(மூன்றாம் சிலம்பு ௫௱௫-ம் பக்கத் தொடர்ச்சி)

பாங்கற் கூட்டம்

பாங்கற் கூட்டமென்பது தலைவன் இயற்கைப் புணர்ச்சியைத் தனது பாங்கனுக்குத் தெரிவிக்க அவன் அதன் நயத்தைத் தானே உணர்ந்து இருவரது கூட்டத்திற்கும் இணக்கமாய் நிற்றலேயாம். தலைவன் பாங்கனைக் கண்டு **கலப்பதே பாங்கற்கூட்ட***மெனப் படும். தலைவன் பாங்கனைத் தலைப்படாது இயற்*

யைப் புணர்ச்சி நடந்த இடத்தைத் தானே அடைதலும் உண்டு. அஃது இடந்தலைப்பாடு எனப்படும். தலைவனுக்கு மிக்க இணக்கமான பாங்கன் அமையாத விடத்து பாங்கற் கூட்டம் நிகழ்வதற்கு ஏது வில்லை. தலைவியின் தோழியைச் சார்ந்து குறையிரந்து தலைவியை யடைதல் தோழியிற் கூட்ட மெனப்படும். களவியலுள் பாங்கனும் தோழியும் வாயிலாக மாட்டார்கள். பாங்கன் தலைவன் தலைவிகளது நட்பினை அறிந்திணங்குவதே யன்றிக் கூட்டத்திற்கு இடையூறுகிய ஊடலை நீக்குவதில்லை. அவ்வாறே தோழியும் கூட்டத்திற்குத் துணையாவதன்றிப் பொருமை நீக்கப் பயன் படுவதில்லை. இருவரது கூட்டுறவையும் பாங்கன் அறிதல் களவொழுக்கத்திற்குப் பின் வரைவுகடாதல் முதலியவற்றிற்குப் பயன்படுதற் பொருட்டு வேண்டப்படும். அவ்வாறே தலைவியின் பெற்றோர் முதலியோர்க்கு அறத்தொடு நிற்பதற்கும் களவொழுக்கத்திற்குத் துணைபுரிவதற்கும் பாங்கி இருவரது கூட்டுறவையும் தெரியவேண்டியது இன்றியமையாததே. உலகவழக்கத்துள் தலைவன் தலைவியரது கூட்டத்திற்குப் பாங்கன் பாங்கிகள் வாயிலாதல் கூடும். அது சிறப்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட களவொழுக்கத்திற்கு இழிவு தருவதாதலின் கூட்டக் கூடல் களவிற்கு இல்லையென்று நூலாசிரியர் நான்காஞ் சூத்திரத்துள் விதந்தோதினர். பாங்கற் கூட்டமென்பது பலதுறைப் படுத்து விரிவாகத் திருச்சிற்றம்பலக் கோவையாருட் கூறப்பட்டன. இறையனுரகப் பொருளுள் அதன் விரிவு கூறப்படவில்லை. அந்நூலின் உரையுள் பாங்கன் வினுதல் உற்றதுரைத்தல், கழறியுரைத்தல், கழற் றெதிர் மறுத்தல், கவன்றுரைத்தல், இயலிடங்கேட்டல், இயலிடங் கூறல், வற்புறுத்தல், குறிவழிக்காண்டல், தலைவனை வியத்தல், மொழிபெற வருந்தல், நாணிக்கண் புதைத்தல், இன்றியமையாமை கூறல் என்னும் துறைகட்கே செய்யுள் எடுத்துக் காட்டப்பட்டன. திருவள்ளுவர் திருக்குறளுள் தலைமகளது இயல்புரைத்தலும் புணர்ச்சி மகிழ்தலும் தலைவியின் வியப்புமே பாங்கற் கூட்டத்தின் பகுதிகளாகக் கூறப்பட்டன. திருச்சிற்றம்பலக் கோவையாருள் பாங்கனை நினைதல், வலியழிவுரைத்தல், விதியொடு வெறுத்தல், பாங்கன் நொந்துரைத்தல், குறிவழிச்

சேரல், கண்டமை கூறல், செவ்வி செப்பல், அவ்விடத்து ஏகல், மின்னிடை மெலிதல், பொழில் கண்டு மகிழ்தல், உயிர் என வியத்தல், தளர்வகன்றுரைத்தல், கண்புதைக்க வருந்தல், நாண் விட வருந்தல், மருங்கணைதல், ஆயத்துய்த்தல், நின்று வருந்தல் என்னும் துறைகள் மிகுதியாக வகுக்கப்பட்டுள்ளன.

தஞ்சைவாணன் கோவையுள் பாங்கனை நினைதல் என்பதற்குப் பதிலாகப் பாங்கனைச் சார்தல் என்னுந் துறை அமைக்கப் பட்டுள்ளது. பாங்கன் நொந்துரைத்தல் என்பது இருபகுதியாகக் கூறப்பட்டது. அவையாவன: பாங்கன் தன் மனத்தழுங்கல், தலைவனோடு அழுங்கல் என்பன. வற்புறுத்தல் என்னும் துறை இறைவனைத் தேற்றல் என்று பேரிடப் பட்டிருக்கிறது. தலைவனை வியத்தல் என்பதற்கு முன் இகழ்ந்ததற்கிரங்கல் என்னும் துறை அமைக்கப் பெற்றது. தலைவியை வியத்தல் என்னும் துறை இறைவியைக் காண்டல் என்பதற்கு வேறாக அமைக்கப் பெற்றது. கண்டமை கூறல், செவ்வி செப்பல என்னும் இரண்டினையும் தலைவி நிலை கூறல் என்னும துறையுள் தொகுக்கப்பட்டது. உயிரென வியத்தல் என்பதற்குப் பதிலாகக் கலவியின் மகிழ்தல் என்பது அமைக்கப்பட்டது. மொழிபெற வருந்தல் முதலியன தஞ்சைவாணன் கோவையில் பாங்கற்கூட்டத்துள் கூறப்படவில்லை. 'பாங்கியொடு வருகெனப் பகருதல்' என்னும் துறை இக்கோவையுள் மாத்திரம் புதிதாகக் காணப்படுகின்றது. ஆயத் துய்த்தல் என்பது பாங்கிற் கூட்டல் என்னும் பெயர் பெற்றது.

'பாங்கனை நினைதல்' என்னும் துறை களவியலுரையுட் கூறப் படவில்லை. பாங்கனால் பாவையை யடையலா மென்ற கருத்துப் பற்றித் திருக்கோவையாருள் அது கூறப்பட்டது. அது வரைவிற்குச் சிறக்குமே யன்றிக் களவொழுக்கத்திற்குச் சிறக்காது. பாங்கன் வினாதல் கூறுமிடத்துத் தலைவனது திருவொளி மயங்கியதைக் குறித்து வினா எழுந்ததாகக் கூறப்பட்டது. திருக்கோவையாருட் 'பாங்கன் வினாதல்' என்னும் துறையின் கீழ்ச் சங்கத் தமிழ் ஆராய்ச்சியினாலும் ஏழிசை ஆராய்ச்சியினாலும் தலைவனுக்

குத் தோள் மெலிவு எய்தியது போலும் என்னும் கருத்துடைய பாட்டு எழுந்தது.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்ப லத்துமென் சிந்தையுள்ளு
முறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
விறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே.

இது மிகவும் நயமிக்கது.

தஞ்சைவாணன் கோவையுள் ஒளி குறைந்ததும் தோளு உள்ளமும் வாடியதும் சுட்டியது காண்க. இதனுள் குறைந்த ஒளிக்கு சூர் என்னும் தெய்வப் பெண் தீண்டின உடலொளியை உவமித்தார்.

"சிலம்புறை சூர்வந்து தீண்டினபோ லொளிதேம்பி யிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடியுருகி நின்று"

என்றது காண்க. இதனுள் **இறையனாரகப் பொருட்** கருத்தும் **திருக்கோவையார்க்** கருத்தும் ஒன்று சேர்க்கப்பட்டன.

(தொடரும்)

நூல்

[M. S. பூர்ணலிங்கம்பிள்ளை, B.A., L.T.]

மனிதனுக்கு அறிவு இருவகைத்தாம். இயற்கையறிவு பிறப்பிலமைந்தது. அது தந்தை, தாயர், மூதாதையர் அறிவாம். செயற்கை யறிவு நூலறிவு, பலருடன் பழகுவதனாலுண்டாகுமறிவு நூலறிவு. பிறருடைய இயற்கை யறிவுஞ் செயற்கை யறிவுங் கலந்து தெளிந்து வரையப்பட்ட தொன்றைப் படிப்பதனால் வருமறிவு. நூலில் நாற்பயனும், எழுவகைமதமும், பத்துக் குற்றங்கள் நீங்கிய பத்து அழகும், முப்பத்திரண்டு யுத்தியும் பொருந்தி யிருப்பதைக் காணலாம். அது முதனூல் வழிநூல் புடை நூலெனு மூன்று வகைப்படும். நாற்பயனாவன: அறம், பொருள், இன்பம், வீடு. எழு மதம் அல்லது மனத்தின் கொள்

கை யாவன : உடன்படல், மறுத்தல், களைதல், நிறுத்தல், துணிதல், குற்றமே காட்டல், தம்மதங்கொளல். குற்றங்கள் பத்தாவன : குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொல் புணர்த்தல், பொருள்மயங்கவைத்தல், பொருளின் சொற்களை வெற்றெனத் தொடுத்தல், எடுத்ததை விடுத்து வேறொன்றை விரித்தல், சொல்லும் பொருளும் போகப் போகத் தேய்ந்து முடிதல், பயனில் சொல்லல். பத்து அழகு ஆவன : சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், இன்பந்தருதல், நல்லசொல் வழங்கல், ஓசையுடைமை, ஆழமுடைமை, முறையில் வைத்தல், உலகமலையாமை, விழுமியது பயத்தல், தக்க மேற்கோள் காட்டல். யுத்தி முப்பத்திரண்டாவன : எடுத்தாளப்போவதிதுவெனல், இயல்களை முறைப்படி வைத்தல், தொகைப்படுத்திக் கூறல், பிரித்துக் காட்டல், முடித்துக் காட்டல், முடிவிடங்கூறல், ஆசிரியவசனங் காட்டல், பிறர் கோட்பாடு கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்ச்சொற் புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்தது விலக்கல், எதிரது போற்றல், முன்மொழிந்து கோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலை துணிதல், எடுத்துக் காட்டல், எடுத்தமொழியினெய்த வைத்தல், இன்னதல்ல திதுவெனமொழிதல், எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல், பிறநூன்முடிபிற்குடன்படல், தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல், சொன்முடிவில் பொருள் முடித்தல், இனம் இனமில்லாதது இவற்றைக் கூட்டி முடித்தல், உய்த்துணர்வைப்பு. இவையன்றி செய்யுள் வழக்கும், உலகவழக்கும் முரண்படாதவாறு பொருந்தவமைத்துக் காட்டுவதே நூலெனப்படும். நூலின் போக்கு பலவகைத்தாம். ஆறு இடையறாமல் ஒருமுகமாக ஓடுவது ஆற்றொழுக்கெனப்படும். முன்னும் பின்னும் கவனித்துப்போதல் அரிமா அல்லது சிங்கநோக்கு எனப்படும். இவைவிட்டுக் குதிக்கின்ற தவளை போன்று தொகுத்துக் கூறாமல் விடுத்து விடுத்துப் பொருளைக்கூறல் தவளைப்பாய்ச்சல் எனப்படும். பருந்து உயர்ந்த

நிலையினின்று இரையை நோக்கித் தலை குப்புற வீழ்தலை யொத்துக் கொண்ட பொருளைப் படிப்படியாக வெளியிடாமல் திடீரென்று கூறுதல் பருந்தின் வீழ்ச்சி எனப்படும். இத்தகைய இலக்கணம் அமைந்து ஆக்குவோர் புலவரெனப்படுவர், அமைக் கப் பட்டதை முற்று முணர்ந்தோர் புலமை வாய்ந்தோரெனப் படுவர். நூலரென்பது இருவரையுங் குறிக்கும் பொதுச் சொல் லாம்.

"நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுஅதன் பண்பே."

இயற்கை யறிவும் நூலறிவுஞ் சேருமாயின் அவற்றிற்கு மேலான தொன்று மில்லை. இரண்டும் அமைச்சருக்கு வேண்டுவன.

"மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை."

கவிவாணரும் புலமை வாய்ந்தவருமாகிய நூலோர் ஒரு வரினு மொருவர் சிறந்து விளங்குவராயின் அது விரும்பத் தக் கது. வேலைப்பிடித் தெறிய வல்லானொருவன் யான் இன்னணம் வெற்றி பெறுவேனென்பானாயின் அவன் தன்மை விரும்பப் படும். அதி நுட்பமானவனே தூதுவனாகத் தெரிந்தெடுக்கப் படுவான். அவனே வெற்றிவழியை நாடுவான்.

"நூலாருள் நூல் வல்லனாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப் பான் பண்பு."

நூல் பலவற்றைக் கற்றவன் அவைக்களம் புக அஞ்சுவானா யின் அவன் கல்வி பயன் பெறாது. எங்ஙனமெனில், கோழைகள் தம் கையில் வாளை ஏந்துவதாற் பயனில்லை யன்றோ? எதிர்பாரா தது நேரிடுமாயின் மனவுறுதி யில்லாத பேடிகள் வாளைக் கை நழுவ விடுவார்கள். அன்றேல் அதனைப் பகைவன் கையில் கொடுத்துத் தன்னுயிரையு மிழப்பானன்றோ?

"வாளொடு என்? வன் கண்ணர் அல்லார்க்கு
நூலோடு என்? நுண் அவை அஞ்சுபவர்க்கு"

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன் கற்ற நூல்"

தூதுவரன்றி ஒற்றரும் உரைசான்ற நீதி நூலும் மன்னருக்குக் கண்களாம். எத்தொழிற்கும் நூலறிவு வேண்டும். அரசனுக்கு அரண் முறை நூல் அகத்தியம். மருத்துவருக்கு மருத்துவ நூலறிவு தீராதது. காவலன் காவானெனின் "அறுதொழிலோர் நூல் மறப்பர்." நூற் பயிற்சி செய்வார்க்கு அமைதி இன்றியமையாதது. அமைதி அரசனால் விளையும். அரணின்றி அரசனுமிலன்.

"உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவு அரண் என்றுரைக்கும் நூல்."

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று"

உடற் செம்மை நாடுவோருக்கு ஏற்பதை உண்க, பசித்துண்க, அளவறிந்துண்க, எனப் பலர் கூறுதலைப் பலமுறை கேட்டுளோம். வைத்தியரோ உடலிலுள்ள வளி, தீ, நீர் இவற்றிற்கு வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற ஒலி நிறைந்த சொற்களை யடுக்கி இவற்றி லேதேனும் அதிகப்படினும் இருக்க வேண்டிய அளவிற்குக் குறைபடினும் நோயுண்டாகு மென்பர்.

அந்தத்தை அணவுவோராகிய முனிவர்களும், அழகிய குளிர்ந்த தன்மையடைத்த அறிவர்களும் ஞான நூல்கள் பயிலுவர். அன்னார்க்கும் புரவலன் துணை தேவை என்னுமிடத்தில்

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்றுளார் நாயனார்.

நல்லவர்களுடைய சேர்க்கை நாளுந் தலைப்படும். எதுபோ லெனில் ஒன்றை மாறி மாறிப் படிக்கும்போது புது நயங்கள் வெளிப்படும்.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

ஒருவர் தம் விருப்பத்தைப் பிறரறியாமல் உய்ப்பராயின் பகைவர் எண்ணம் பயன் படாது என்ற குறளில் நூல் என்ற சொல் எண்ணம் என்ற பொருளில் வந்துளது.

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்"

வரையப்பட்ட நூலன்றி பருத்திநூல், பட்டுநூ லென்ற இயற்கைப் பொருள் தரும் நூலு முள. அதனையும் நாயனுர் கூறியுளார்.

"மணியில் திகழ்தரும் நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு"

கோக்கப்பட்ட பல மணிகளுக்கிடையே நூல் தோன்று வது போல பெண்ணின் அணியினின்று அறியக் கூடிய குறிப்பு ஒன்றுளது.

தாய்

[M. S. பூர்ணலிங்கம்பிள்ளை, B.A., L.T.]

நாகரிகம், ஏற்படு முன் ஆடவரும் பெண்டிரும் காதல் கொண்டு கட்டுப்பாடின்றித் திரிந்திருப்பரென்று மக்கள் வரலா றுரைப்பவர் கூறுவர். ஒருவனுக்குப் பல மடந்தையரும், ஒரு காரிகைக்குப் பல காதலரும் இருந்து வாழ்ந்தனர் என்பதும் வெளிப்படை. ஏனைய நாடுகளில் ஆண் தலைமை நிகழ்ந்து வரு வதும் திருவாங்கூரில் பெண் தலைமை பெற்று வாழ்வதும் எவரும் அறிந்தனவேயாம். தாயகம், தாயாதிபாக மென்ற சொற்றொட ரால் தாயின் தலைமை விளங்கும். தகப்பனின்னுனென்று பிள்ளை

அறிவது தாயின் மொழியாலன்றோ ? ஒருமாது ஒரு காதலனின் றிப் பலரைக் காதலித்த நாளில் பிறக்கும் பிள்ளைக்குத் தகப்பன் இவனென்று தாயன்றி வேறெவருஞ் சொல்ல இயலாது. ஒரு நாயகனையுடைய மாதரசியும் தானீன்ற பிள்ளைக்குத் தகப்பனைக் காட்டி அறிவுறுத்தலைக் காண்கின்றோம். 'அப்பா', 'அய்யா' என்று கூறுமாறு சிசுவிற்குக் காட்டி மொழிவது அம்மையே. கருக் கொண்ட நாள் முதல் பிள்ளைப்பேறு வரை பத்துத் திங்களிலும் பல்வகைத் துன்பமுற்று, வயிறு வாய்த்து, ஒங்காரமெய்தி, உடல் மெலிந்து, உண்ணக்கிடக்க வருத்த முற்றுப் பிரசவ வேதனைப் படும்போது பிரசவமாய், தன் வயிற்றினின்று வெளிவந்த பிள்ளை யையனென்ற போது கரையிலாவின்ப முறுவது தாயே ஆவள். பிறந்த பின்னரும் தாயே பிள்ளைக்கு அமுதமளித்துச் சீராட்டிப் பாராட்டுகின்றாள். 'தாய் மனம் பித்து' என்பது முதுமொழி. தாய் மனங்கரைதல் போன்று எவர் மனம் கரையும்? "பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ? புகலிடம் பிறிதுமுண்டோ?" என்றனர் தாயுமானாரும். 'கற்றா', 'கன்றுடைய ஆ' என்ற தொடர் பரிவினை விளக்க உவமமாக வருவதை நூல்களிற்காணலாம். 'கற் றாதரல் போல', அதாவது கன்றுடைய பசுவானது பால் சுரந்து தருதல் போல என்பதாம். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய் வம்', என்பதில் அன்னையே முதற்றெய்வம், பிதா அன்னையறி வித்த தெய்வமாகும். இருமுது குரவரும் தெய்வமாக வணங்கத் தக்கவர். 'தந்தை தாய்ப்பேண்' என்ற முதுமொழியில் தாய் பின் வைக்கப்படுவதற்கு நியாயந்தோன்றும். தனக்கு மூத்தவளைத் தாலிகட்டும் வழக்கம் இந் நாட்டிலில்லை. தகப்பன் தாய்க்கு மூத் தவனே. பேணுகின்ற முறையில் மூத்தவனாகிய தகப்பன் தலைப் படுகின்றான், இளைஞளாகிய தாய் பின்வருகின்றாள். கல்வி பயிற் றுவிக்கு முறைமை தகப்பனுக்கும் உடலைப் பேணு முறைமை தாய்க்கும ஏற்பட்டுள. "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை", "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பனவற்றால் இவ் வுண்மை விளங்கும்.

ஒருவன் சிறுதுயரம் எய்திய பொழுது 'அப்பா' என்றும், பெருந்துயரெய்திய பொழுது 'அம்மா' வென்றும், உடல் வருத்த

மும் மனவருத்தமும் ஆற்ளுத வமயத்தில் 'அப்பா, அம்மா' வென்றும், மாறியும் அலறுதல் நாடொறுங் காண்கின்ளும். எம்பெருமானைத் தகப்பனென்று கொள்ளுதல் இயல்பு. தாயின் கடமையையுஞ் சேர்த்துச் செய்யும் அப்பனை அம்மையப்பன், தாயப்பனென்பர். திருசிரத்தின்மேற் பள்ளிதொண்டத னிமித் தம் திருச்சிராப் பள்ளி என்ற பெயர் பெற்றுத் திகழும் தளியின் கண்ணுள்ள ஈசனைப் பாடிய மருள்நீக்கியார்,

"தாயுமாய் எனக்கே தலை கண்ணுமாய்ப்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை"

என்று வழுத்தியுள்ளார். இதுகாறுங் கூறியவற்ருல் தாயின் அருமை பெருமை விளக்கப்பெற்றது.

ஒரு தாய்க்குப் பிறந்த பிள்ளைகளில் குணவேறுபாடுகள் காணப்படும். தாய் பிள்ளைகளிடத்தில் விழைவது நல்லொழுக் கமே யாம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேனெனக் கேட்ட தாய்"

மகன் களியாட்டயருங் குடிகேடனுயின் பிள்ளையைத் தாயும் வெறுப்பாள்.

"ஈன்ருள் முகத்தேயும் இன்னுதல் என்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி"

ஒழுக்கம் விழுப்பந்தரலால் சான்ருேர் பழிக்கும் வினையை மக்கள் செய்யாதிருக்கக் கடவர். தாய் பசித் திருத்தலைக் கண்டு பரிவுருத மகனுமுளனே?

"ஈன்ருள் பசிகாண்பா னுயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை"

அறிவும், மாண்பும், பண்பும் அமைந்த மகனைத் தாய் அருமை யாக நடத்துவாள்; கல்லாத மூடன் தலைப்பிள்ளையாயினும் அவனை உலகம் போற்ருது.

"பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயு மனந்திரியும்"

ஒருகுடிப்.பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது, அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்"

தாயைப் போல மகள், என்பது பழமொழி, மகளையடித்து வளர், மகளைப் போற்றி வளர், என்பது மற்றொரு முதுமொழியாம். பெண் மக்கள் பேரில் தாயாருககுக் கண்ணுங் கருத்தும் யாண்டுமுள. கடுங் குற்றஞ் செய்யினும தாய் மகளைப் பழி கூறாள். ஊரார் அலர் தூற்றுவரேல் தாம் அதனை மறைக்க முயலுவளே யன்றி அதற்கு ஒப்பமிடாள். அதனைக்கேட்ட அளவிலே கடுஞ்சொல்லே அவள் வாயினின்று புறப்படும். கடுங்கோபம கட்பொறி காட்டும் காம நோய் கொண்ட மகள் தன் அன்னை கூறிய கடுஞ்சொல்லே உவமித்துக் கூறு மிடத்து,

"ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய்"

என்றனள். காமநோயாகிய பயிருககு ஊரிலுள்ள பெண்களுடைய பழிச்சொல் எரு, உரம், போலவும் தாயின் சொல் தண்ணீராகவும இருத்தலால் காமப்பிணியால் உண்டாய அலர் வளருகின்றது. இவ்வாறு வளர்வதால் மணஞ்செய்தலே கடமையாகின்றது. அதனைக் காலந் தாழ்க்காது முடித்தல தகைமை என்பது விளங்கும்.

சங்க நூல்களில் நற்றாய், செவிலித்தாய் என இருவகைத் தாயர் காணப்படும். பெற்ற தாய் நற்றாய், வளர்த்த தாய் செவிலித்தாய். களவு, கற்பு நிகழ்ச்சிகளில் இருதாயருஞ் செய்யுங் கடப்பாடுகளுள், நற்செவிலித்தாயாகிய தோழி கூற்று நிகழும் இடம் பலவும தொல்காப்பியம், பொருளதிகாரம, களவியலில் "நாற்றமுந் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும" என்ற தலைப்புள்ள 32-ம் சூத்திரத்தில் தொகுத்துக கூறியிருப்பதைக் காண்க.

தாயார் ஐவகைய ரென்பர் பெரியர். ஐவரும் முலைத்தாய், ஊட்டுந்தாய், கைத்தாய், பாராட்டுந்தாய், செவிலித்தாய் ஆகிய இவரேயாம். வேறுவகையிலும் ஐந்தாயர் கூறுவதுண்டு, அன்னார் தன்னையீன்றாள், தன் தேவியை ஈன்றாள், அண்ணன் தேவி, குருவின் தேவி, அரசன் தேவி எனப்படுவர்.

"மக்களில்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை;
ஈன்றாளோடு என்னகடவுளும் இல்"

"என்செயினும்
தாயிற் சிறந்த தமர் இல்லை"

"தாய் முலையின்
பால் நோக்கி வாழும் குழவிகள்"

"குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே.
குழவி தளர் நடைகாண்டல் இனிதே."

"எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது"

---

*சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்

[ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்]

அறிவிற்சிறந்து விளங்கு மாட்சிமிக்க அக்கிராசனாதிபதியவர்களே!
இவ்வவைக்கண் விளங்கும் அன்புமிக்க ஆன்றோர்களே!

பெரியோர்களாகிய நுங்கள் அன்புரிமைசான்ற ஆணையைக் கடக்க அஞ்சி யொல்லும் வகையான் மேற்கொள்ள விரும்பியும், திருவருட்டுணை கொண்டும இப்பொழுது செயக்கடவதாகிய என் கடமையை நிறைவேற்றத் துணிகின்றேன்.

---

*(இது, பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்கத்தின் ரு-வது ஆண்டு நிறைவு விழாவில் வாசிக்கப் பெற்றது.)

யான் மேற்கொண்ட "சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்" என்னும் இவ்விஷயத்தைச் விரித்துக் கூறற்கு இடந் தருந் தேவாரத் திருப்பாசுரம் வருமாறு:—

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

இப்பாசுரத்தின் அருளொளியும் பொருளுமே இவ்விஷயத்தை விளக்கற் குதவியாயின வென்பதை யிறுதியிற் கூறப்படுந்தொகை யுரைக்கண் முடித்துக் காட்டுவேன்.

மறையாகமங்களானும், அவற்றின் முடிவு நூல்களானும் பொதுவாகவுஞ் சிறப்பாகவும் விளக்கப்பட்ட பதிப்பொருள் சிவபிரானே யென்பது அந்நூல்களைச் செவ்விதினாராயு துண்ணறி ஞர்க்கெல்லாம் ஒத்ததொன்றும். இப்பதிப்பொருளைக் கடவுண் முதலிய பொதுப்பெயர்களான் வேதநெறியொழுகும் எல்லாச் சமயத்தார்களும், சிவன் முதலிய சிறப்புப்பெயர்களாற் சமயாதீதமாகிய சைவ நெறி நிற்போருங் கூறுப. கடவுள் என்னும் சொற்குப் பொருள் கடந்தவரென்பதாம். எவற்றைக் கடந்தவ ரெனின், சுட்டியறியப்படுங் காரியரூபப் பிரபஞ்சத்தையும், அதனாற் றத்துவ தாத்துவிகங்களையும் கடந்தவரென்க. இப்பொருள் ஏனைய தேவர்களுக்கு உண்மையிற் பொருந்தாதென்பது, அன்னார் சிவாகமங்களுட் கூறப்படு முப்பத்தாறு தத்துவங்களுக் குட்பட்டவர்களாதலானும், பேராற்றலுடைய சிவபிரா னியக்கத் தான் ஒவ்வோரதிகாரங்களைப் பற்றி நிற்பவராகலானுமாம். மற்றைச் சமய நூல்கள் போலாது சைவசமயத்திற் குறைவின்றிக் கூறப்படுந் தத்துவங்கள் முப்பத்தாறும். அவற்றைக் கடந்து நிற்பவர் பரம்பொருளாகிய சிவபிரான் ஒருவரே யாவர். இம்முப்பத்தாறு தத்துவங்களு முப்பகுதியினவாம். அவற்றுள், தொடக்கப் பகுதியாகிய ஆன்மதத்துவ விரியுள் ஒவ்வொன்றே ஏனைய சமயக் கடவுளர்களின் நிலயமாகும். ஆதலிற் கடவுண் முதலிய சொற் களும் உண்மையிற் சிவபிரானையும் உபசாரத்தான் மற்றைத்

தேவர்களையுங் கூறுவனவாம். இங்ஙனமே வடமொழிக்கட் கூறப்படும் பிரமசப்த முதலியவை உண்மையிற் சிவபிரானையும் உபசாரத்தாற் பிறதேவர்களையுங் குறிப்பிடும் பொருளுடைய வென்பது, சுவேதா சுவதரம், கேநம் முதலிய உபநிடதங்களா னும், அவற்றை விரித்து விளக்கிய வாயுசங்கிதை முதலிய புரா ணங்களானும் நன்குணரலாம். இன்னும் இவ்விஷயமாக வேதாக மாந்தங்களை நிலைகண்டுணர்ந்த நீலகண்டவாசிரியர், அரதத்தா சாரியர், அப்பயதீக்ஷிதர் முதலிய சைவப்பெரியோர்கள் சிறிதும் ஐயமின்றி ஆராய்ந்துரைத்தருளிய அரிய வடநூல்களானுந் தெளியலாம். பிரபஞ்ச நிகழ்ச்சியினிமித்தம் ஒவ்வொரு தேவர் களையும் அதிட்டித்து நின்று சிவபிரான் ஒருவரே சிருட்டியாதி யருட்டொழில்களைப் புரிவர். அதனாலன்றே,

> "शिवोमहेश्वरश्चैवरुद्रोविष्णुः वितामहः ।
> संसारवैद्यस्सर्वज्ञः परमात्मेतिदुग्यतः ।
> नामाष्टकमिदंनित्यंशिवस्यप्रतिवादकम् ॥"

என்று வாயுசங்கிதை கூறியாங்கு தொழிலதிகார நிலயராகிய முக் கிய தேவர்களின் பெயர்களெல்லாஞ் சிவபிரானுக்குப் பொருந் தின. சிவனென்னும் வாசகமோ "சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்" என்னுந் தமிழ் வேதத்தான் ஏனையோர்க்குச் செல்லாதென்பது போதரும். இதனாற் சிவ பிரானுக்குள்ள முழுமுதன்மை வேறு தேவர்களுக்கின் றென்பது முணர்க. இங்ஙனமின்றி நித்தியமங்களார்த்த வாசகமாகிய இச் சிவசப்தத்தை பிறசமயத்தார் தஞ்சமய தெய்வங்களுக்குக் கூறிக் கொள்ளின், அஃது அந்வர்த்த நாமமாகப் பொருந்தாதென்ப துண்மை யெனினும், நம் சிவபிரான் மாட்டு அமைந்துகிடக்கும் உயர் நலங்களே அன்னாரை யவ்வாறு கூறச்செய்தன வென்றும், அதனாற் சைவ மக்களாகிய நம்மனோர்க்குப் பெருமையே யென் றும் நினைந்து மகிழ்வேமாக. இத்துணையும் ஒருவாறு சுருக்கி யுரைத்த சிவபரத்துவ விஷயம் தனியான ஓரிய உபந்யாசமாக விளக்கவேண்டியதொன்றாகலின், இதனை நிறுத்தி மேல் இப்பெரு மான் கருணைத் திறத்தைச் சிறிது கூறுவேன்.

(க) கருணையினிலக்கணம்

கருணை, தயை, இரக்கம், அருள் என்பன ஒரு பொருட் சொற்கள். இது:—பரமபதியாகிய சிவபிரானுக்குரிய குணங்கள் எட்டனுள் முக்கியமான தொன்றாகும். இதுவே, அப்பெருமானிடத்து அலுப்த சக்தி, அல்லது பேரருளுடைமை யென்று சொல்லப்படும். இக்கருணைக் குணத்தின் இலக்கணமாவது, ஒருவர் தமக்குரியாரை நோக்கி இவர் எமது தந்தையார்; இவர் எமது தாயார்; இவர்கள் எம்உடன்பிறப்பாளர்; இவர்கள் எம்உறவினர்; இவள் எமது மனைக்கிழத்தி; இவர்கள் எம்புதல்வர்கள் என்றின்னோரன்ன தொடர்பு பற்றி மேற்கொள்ளும் அன்புபோலாது எல்லாவுயிர்கண் மாட்டும் இயல்பாக நிகழ்கின்ற அருளேயாகும். இவ்வுயர்குணம் நம்மனோர்க்கு ஒருசிறிது வாய்க்குமாயின், அது தொடர்பு பற்றி யெழும் அன்பின் முதிர்ச்சியா லுண்டாயதென் றறிதல்வேண்டும். இது கருதியே "அருளென்னுமன்பீன்குழவி" யென்றார் திருவள்ளுவ தேவரும். இவ்விடத்துத் திருத்தொண்டர் புராணத் திருப்பாட்டினியைபு ஒன்றனைப் புலப்படுத்தி மகிழாமலிருக்கக் கூடவில்லை யாதலின், அதனையுஞ் சிறிது காட்டுதலவசியமாகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் சீகாழியில் திருத்தோணியப்பரையும், அம்மையாரையுந் தரிசிப்பான் செல்லுங்கால் அவ்விருவர்களும் ஒருங்கு கூடிச் செல்லுந் திப்பிய காட்சியை நூலாசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள், தமமனத்தின்கண், தியானமுகமாக எழுதிப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தின்புற்று, அம்மகிழ்ச்சி யின்பங்களை நம்மனோருஞ் சிறிது பெற்றுய்யுமாறு, தாந்துய்க்கும் இன்பம் பொங்கி வெளிப்படுதல்போல ஓரருமைப் பாசுரத்தை யருளியிருக்கின்றார்கள். அப்பாசுரத்தின் கருத்து, அந்நாயன்மார்க ளிருவர்களது ஒன்றுபட்ட தோற்றத்துக்கு ஒப்புக் கூறுவதேயாகும்.

அது வருமாறு:—

"அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்புநெறி கடலுமா மெனவு மோங்கும், பொருட்சமய முதற்சைவ நெறி தான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன முய்ய, இருட்கடிவுண் டவருளு முலகமெல்லா மீன்றாடன் றிருவருளு

மெனவுங் கூடித், தெருட்கலைஞா னக்கன்று மாசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே" என்பதே.

இதன்கட் கூறப்பட்ட வுவமைகளையன்றி வேறு எத்துணை நீண்டுநினைப்பினும் "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" யென்னும் உவம விலக்கணத்துக்கு மாறுபாடின்றி யீண்டுக்கூறத்தக்கது யாதுளது? என்னே இவ்வுவமைகளின் அருமைநயங்கள்! இங்ஙனங் கூறுதலன்றே ஆன்ற அருட்கவிகளினியற்கை. இப்பாசுரத்தினரும் பொருள்களை முற்றக்கூறினீண்டு விரியுமாதலின், இயைபுடைய முதலடியின் பொருளைமாத்திரஞ் சுருக்கிக் கூறுவேன். இதனிறுதி படியில் "தெருட்கலை ஞானக்கன்று மாசும்" என்று கூறுவதால் நிரனிரையாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனங்கொள்ளுங்கால் அருட்பெருகு தனிக்கடல் திருஞானசம்பந்த சுவாமிகளும், அன்புசெறிகடல் திருநாவுக்கரசு சுவாமிகளுமாவார். இவ்விருவரிடத்தும் அருள் அன்பு என்னும் இருகுணங்களுமுளவெனினும் அவற்றுளாம் பயனை நோக்கி விசேடமாக ஆராயுங்கால் அப்பர் சுவாமிகள், சிவபிரானும், சிவனடியார்களுமே தமக்குரியவர்களாகக்கொண்டு அன்பு செய்தமையானும், தாதமார்க்கத்தில் வெளிப்பட நின்று ஒழுகியமையானும், அம்மார்க்க ஒழுக்கத்துக்குத் தலைவன் ஒருவனை மேற்கொண்டு அன்பு செய்தலே முக்கியமாதலானும், அவர்களிடத்துள்ள அருட்குணத்தினும் அன்பே யார்வக்கும் வெளிப்படக் காணப்படலான், அவர்களை யன்புக்கடலென்றும், திருஞான சம்பந்த சுவாமிகளிடத்து இவ் அன்புளதெனினும் அவர்கள் சற்புத்திரமார்க்கத்தில் வெளிப்பட ஒழுகியமையானும், இறைவன்குணம் அருளேயாதலானும், சுவாமிகளிடத்து எல்லாவுயிர்கண் மேலும் இயல்பாக எழுங்கருணையே மேலிட்டிருந்தமையானும், திருப்பெருமண நல்லூரில், தந் திருமணக் கோலத்தைத் தரிசிக்க வந்திருந்த பக்குவாபக்குவர்களாகிய வெல்லோர்க்கும் அக்கணத்திலேயே ஸம்ஸ்கார பூர்வகமாகக் கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப்பிடர்பிடித்துத் தள்ளித்தம் அருட்குணப்பயனைக் காட்டியமையானும் அவர்களையருட்கடலென்றுந் திருவாய் மலர்ந்தருளினார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள். (தொடரும்)

தம்பிரான்றோழர்

[இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

(௨௯௯-ம் பக்கத் தொடர்ச்சி)

பின், அச்சேனாபதியார் தம்மனையில் அவருக்கு இன்னமுதளித்து இறைஞ்சி, தாம் அருமையாகப் பெற்றெடுத்த பெண்மணிகளாகிய சிங்கடியாரையும், வனப்பகையாரையும் கொணர்ந்து பணிவித்து, "அடியேன் பெற்ற இம்மக்களை அடிமையாகக் கொண்டருள் செய்யவேண்டும்" என வேண்டிக்கொண்டார். அது கேட்ட நம்பியாரூரர், "இப் பெண்மணிகள் எனக்குச் சிறந்த மக்கள்" என்று அவர்களைத் தமது மக்களாக ஏற்றுக் கொண்டார். அவர் அக் குழந்தைகளைத் தம் மடிமீதிருத்தி, உச்சி மோந்து, அவர்களுக்கு விருப்பமான பொருள்களையும் கொடுத்தருளி கோயிலுக்குச் சென்றார். செல்லும்போது தூரத்தே தோன்றிய கோபுரத்தை வணங்கி, உச்சிமேற் குவித்த கரத்தோடும் கோயிலினுள்ளே புகுந்து பணிந்து, "பூண்நாணாவதோரரவங் கண்டஞ்சேன்; புறங்காட் டாடல்கண் டிகழேன்; காணீராகிலும் காண்பன். உம்மடி பாடுத லொழியேன். அஞ்சாதே யுமக்காட்செய வல்லேன்; மணியே, மாணிக்க வண்ணா! நான் உமையல்லா லொருவரை நச்சேன். உம்மைக் கருதாதார் தம்மைக் கருதேன்; ஓட்டீராகிலும் ஓட்டுவன்; உம்மைப் பாடியும், நாடியும் அறிய நட்டேனாதலால், நான் மறக்கில்லேன். உமக்கடியேன் ஆட்பட்டது நைவானன்று; கலியேன் மானுட வாழ்க்கை ஒன்றாகக் கருதிடில் கண்கணீர் பில்கும். தொண்டரடித் தொழுவார் தொழக்கண்டு என் வினைபோகத் தொழுதேன். நாட்டியத்தான்குடிநம்பி,

"கூடாமன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன்
கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளும் மறவாச்

சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவா
ரூர னுரைத்த
பாடீராகிலும் பாடுமின் தொண்டீர்! பாட
நும்பாவம் பற்றறுமே"

என்று பதிகம் பாடிப் பணிந்தார். இவ்வாறு திருக்கடைக் காப்பிலே கோட்புலி நாயனாரைச் சிறப்பித்ததோடு, சிங்கடியாரைப் பிறப்பித்தெடுத்த தந்தையாகத் தம்மை நினைந்த பெற்றியினால், சிங்கடியப்ப னென்று தம்மை வைத்தருளினார்.

பின், அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவலி வலத்தை யடைந்து, கோவிலினுட் சென்று, "பல்லடியார் பணிக்குப் பரி வானை, பாடியாடும் பத்தருக் கன்புடையானை, நல்லடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை, நானுறு குறையறிந்தருள் புரி வானை, நல்லிசை ஞான சம்பந்தரும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துதலை யுகப்பானை, எவ்வெவர், தேவர், இருடிகள், மன்னவர் எண்ணிறந்தார்கள் எங்கும் நின்றேத்த, அவ்வவர் வேண்டியதே அருள் செய்து அடைந்தவர்க்கே இடமாகி நின்றானை வலிவலம் தனில் வந்து கண்டேனே. எம்பெருமான் அருளாய் என்ற பின்னை என் ஆவி வவ்வி மனங்கலந்தானை, சான்று காட்டுவதற் கரியவன், தன் னிலா மனத்தார்க் கெளியவன் றன்னை வலிவலம் தன்னில் வந்து கண்டேனே" என்று பதிகம் பாடிப் பணிந்து, அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவாரூர் சென்று பூங்கோவில் பணிந்திருந்தார். அங்கிருந்துகொண்டு அவ்வூருக் கருகேயுள்ள பல கோவில் களுக்கும் போய் வணங்கி மீண்டு இன்புமுற்றிருந்தார்.

அப்பொழுது பங்குனி உத்திரத் திருநாள் வந்தது. அத் திருவிழாவிற்கு வருபவர்க்கெல்லாம் வேண்டுவன கொடுத்து இன் பூட்டுவது பரவையாரியல்பு. அதனால், அக் கொடைக்கு வேண் டும் பொன் கொண்டுவருவதற்காக நினைந்து, நம்பியாரூரர் திருப் புகலூரை யடைந்தார். அங்கே கோவிலினுட் சென்று பெரு மான் அடி போற்றிப் பதிகம் பாடித் தமக்குப் பொன் தர

வேண்டி நின்றார். சிறிது பொழுது கும்பிட்டு நின்று, ஒன்றும் பெறாது புறம் போந்து, அயல் மடத்திற்குப் போகாமல் கோவில் முன்றிலின் ஓர் புடை அன்பருடனிருந்தார். அப்பொழுது கடவுளருளால், அவருக்குத் துயில்வந் தெய்தியது. அதனால் தம்பிரான் றோழர், கோவிற் றிருப்பணிக் காக்குவித்திருந்த பல சுடு மட்பலகை கொணர்வித்து, உயரம் பண்ணி, அதன்மேல் வெண் பட்டு விரித்துப் பள்ளி மேவினார். சுற்று மிருந்த தொண்டர்களும் துயின்றனர். அவ்வளவில், நம்பியாரூரர் விழித்தெழுந்து பார்க்க, தமது தலையணையாய செங்கற்கள் செம்பொற் கல்லாயின கண்டார். கண்டவர், அளவிலடங்காப் பேரன்பு கொண்டு, தலைமேல் கரங்குவித்து வணங்கி, ஒப்பிலா இன்பத்தை இம்மையிலேயே தந்தருள்பவராகிய பெருமானை நோக்கி,

“தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

வலிமையில்லாதவனை வீமனென்றும், விசயனென்றும், கொடுக்கிலாதானை பாரி என்றும், நரைத்து உடல் தளர்ந்து நடுங்கி நிற்கும் கிழவனை மலைபோலப் பருத்த தோளுடையவ னென்றும், மிகக் கொடிய பாவியைச் சாது என்றும், இழிகுலத்தவனை உயர் குலத்தவனென்றும், கற்றிலாதானைக் கற்று நல்லனென்றும், எள் விழுந்திடம் பார்க்குமாகிலும், ஈக்கும் ஈகிலனாகிலும் அவனை எங்கள் வள்ளலே என்றும் புகழ்ந்தாலும் கொடுப்பாரில்லை. புலவீர்காள்! எந்தை புகலூர் பாடுமின். நீவிர் நெஞ்சில் நோயறுத்து உஞ்சு போவதற் கியாதும் ஐயுறவில்லையே! நாவலூரன், வனப்பகையப்பன், சடையன்றன் சிறுவன், வன்றொண்டன், ஊரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர் அரனடி சென்று சேர்வ

தற்கியாதும் ஐயுறவில்லையே" என்று பாடிப் பணிந்து, விடை பெற்று வெளிவந்து அங்கே தாம் பெற்ற நிதிக்குவை முழுதும் உடன் கொண்டு, புறப்பட்டுத் திருப்பனை யூரை யடைந்தார். அங்கே எம் பெருமானார் அவருக்குத் தமது திருக்கூத்துக் காட்சி தந்தருளினார். அதுகண்ட நம்பியாரூரர் பேரன்போடும் விழுந்து பணிந்து, "ஒரு காதினில் தோடும், மற்றொரு காதினில் குழையும் தூங்க, தொண்டர்கள் துள்ளிப்பாட நின்று ஆடுமாறு வல்லாரவரே அழகியரே, காவிரிபுடைசூழ் சோணாட்டவர், தாம் பரவிய பாவுரி புலவர் பயிலும் திருப்பனையூரில், தோளும் ஆகமும் தோன்ற நட்டமிட்டாடுவார் அடித்தொண்டர் தங்களை ஆளுமாறு வல்லாரவரே அழகியரே; தோள் இருபது தாள் நெறிதர அரக்கனை யடர்த்தார் நாவலூரன், வனப்பகைய வளப்பன், வன்றொண்டன் செஞ்சொற் கேட்டுகப்பார், அரங்கிலாட வல்லாரவரே அழகியரே" என்று பாமாலை பாடி வணங்கி அருள் பெற்றார். பின், அவ்வூராரனைவரும் வணங்கி வழியனுப்பப் புறப்பட்டுத் திருவாரூரை யடைந்து, அளவில்லாத செம்பொன்னைப் பரவையார் மாளிகைக் கனுப்பி விட்டு, தாம் பூங்கோவிலமர்ந்த பிரான் பொன்னடி போற்றி மாளிகையை யடைந்தார். அது கண்டு பரவையார் மனமகிழ்ந்தார். நம்பியாரூரரும் அவ்வூருக் கருகிலுள்ள பல பதிகளையும் வணங்கி யிருந்தார். அக்காலத்து அவர் ஓர் நாள் திரு நன்னிலம் என்ற ஊரையடைந்து, கோவிலி னுள்ளே சென்று, வலம் வந்து பணிந்து, "நலங்கிளர் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே! பல் பிணக்காட ரங்கா ஆடிய மாநடத்தான், கொடுங்காட்டிலே கடுங்கேழலின் பின்கானவனாயமர் செய்து அருச்சுனனுக்கு அருள் செய்தபிரான், நரபதி செம்பியா கோன்றிகழ் கோச் செங்கணான் செய கோவில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவன், அவனைச் சிங்கி தந்தை, திருவாரூரன் பாடிய பத்தும் புகுவார் பரலோகத் துள்ளே" என்று பாடல் பாடிப் புகழ்ந்தார். பின் அங்கிருந்து திருவீழிமிழலை நோக்கிப் புறப்பட்டார். அவ்வூரார் அவருக்கு நடைப்பந்தலிட்டு, எதிர் கொண்டு வந்து அழைத்துப் போயினர். ஆரூரர் அவ்வூரிற் புகுந்து, எம் பெருமான் திருமுன் பெய்தி,

"எம்பெருமானே! தந்தை தாளற எறிந்த தண்டிக்கும், கண்ணிடந்த கண்ணப்பனுக்கும் ஏற்றம் நல்கினீர்; பணிந்த பார்த்தனுக்கும், பகீரதனுக்கும், பல பத்தர் சித்தர்க்கும் பண்டருள் நல்கினீர்; திருமிழலையிலிருந்து நீர், தமிழோடு இசை கேட்கு மிச்சையாய், அப்பருக்கும் சம்பந்தருக்கும் நித்தம் காசு நல்கினீர்; செழுமாடத் திருமிழலை மேவிய நீர், பலி ஏற்றகென் என்று விண்ணப்பம் செய்யும் அடியவருக்கு மெய்ப்பொருளாய அடங்கல் வீழி கொண்டிருந்தீர், அடியேனுக்கும் அருளுதிரே" என்று போற்றி, அங்கே சில நாள் தங்கி யிருந்தார். பின் திருவாஞ்சியத்தை யடைந்து, "திருவனூர் பணிந்தேத்தும் திகழ்திரு வாஞ்சியத் துறையும் நம் அடிகள் அடியாரை ஊழ்வினை வந்து நலியவொட்டாரே; பார்த்தனூர் திரள் தோள்மேல் பகழிகள் பாய்ச்சி திருந்து, மாடங்கள் நீடும் திகழ் திருவாஞ்சித் துறையும் மருந்தனூர் அறை கழல் நமக்குச் சரணே; அக்கழல் நினைப்பவர் வினை நலிவிலயா; திருவாஞ்சியத்துள் மங்கை பங்கனை யல்லலால் யாம் இறை யெனக் கருதுதலிலமே" என்று புகழ்மாலை பாடி அங்கே தங்கியிருந்து பின், அரிசிலாற்றங் கரையிலுள்ள [1]புத்தூரை நோக்கிப் புறப்பட்டார்.

போகிற வழியில், திருநறையூரிலிருக்கும் திருச்சித்தீச்சரம் என்ற கோவிலையடைந்து, நீரும் மலரும் நிலவும் சடையான்! மறங்கொள் அரக்கன் வரைதோள் வரையால், இறக் கொள் விறற்கோன் பேணுமுனிவன் பெரு வேள்வி யெல்லாம் மாணுமை செய்தான் மருவும் இடமாம் நெறியில்வழுவா நியமத்தவர்கள் செறியும் நறையூர்ச் சித்தீச் சரமே என்று போற்றிப் புகழ்ந்து தொண்டர் பலர் எதிர் கொண்டழைக்க அரிசிலாற்றங் கரையிலிருக்கும் திருப்பத்தூரை யடைந்தார். அங்கே தம் பெருமான் திருமுன் பெய்தி நின்று, "அருமலரோன் சிரமொன் றறுத்தீர். திருமகள் மணாளனாகிய நெடுமால் பல நாள் சிறப்பாகிய பூசனை செய்பொழுதில், ஆயிரத்திலொருமலர் குறைந்ததாக அக்குறைவு நிறைவாக ஓர் கண் மலர் சூட்டலுமே, மனமிரங்கி மகிழ்ந்து, பெருவிறலாழி விரும்பியளித்தார். திருப்புத்தூர்ப் புனிதனிரே!

உமக்காரெதிர்? எம்பெருமான்! மால், பிரமன் மற்றும், வானவர், தானவர், மாமுனிவர் பலரும் உம்மை வணங்கித் தொழுகின்றனர். நீர் தலையிற் பலிகொண்டதா லென்னே? உலகங்களெல்லா முடையீர் உரையீர், அகத்தடிமை செய்யும் அந்தணனார் புகழ்த்துணையார், அரிசிற் புகல் கொண்டு வந்து ஆட்டுகின்றார், மிகத்தளர் வெய்தி ஓர் நாள் குடத்தை நும்முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும், அவர்க்குப் பஞ்சம் நீங்கு மட்டும் நித்தலும் ஓர் காசு அவர் கை புகச் செய்துகந்தீர். கடிக்கு மரவால், மலையால், அமரர் கடலைக்கடைய எழும் காளகூடம், உலகங்களை ஒடிக்குமென் றதனை உமக்கே அமுதாக உண்டீர், உமிழீர். இடிக்கும் மழைவீழ்த்து இழுத்திட்டு, அருவி இருபாலும் ஓடி யிரைக்கும் திரைக்கையடிக்கும் புனல் சேரரிசில், தென்கரை அழகார் திருப்புத்தூர் அழகனீரே'' என்று பதிகம் பாடித்தொழுது, அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார். சிலநாட் சென்ற பின், அங்கிருந்து புறப்பட்டுப் பதிகள் பலவும் பணிந்து போந்து திருவாவடு துறையையடைந்தார். அங்கே உளங்கொண்டுருகு மனபினுடன் வலங்கொண்டு, கோவிலினுள்ளே புகுந்திறைஞ்சி, ''ஆவடுதுறை ஆதியெம்மானே! மார்க்கண்டனார் உம்முடைய அடியடைய அவர் உயிர் நிறுத்தக் காலனைக் காலாற் கடந்த காரணங் கண்டு, அடியேன் இறைவன் எம்பெருமான் என்று எப்போதும் ஏத்தி ஏத்தி நின்று, அஞ்சலி செய்து, உன் சேவடிக்கு அன்போடும் அடைந்தேன். தெருண்ட வாயிடை நூல் கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கன வியற்ற அது தன்னைச் சோழனாக்கினாய். திகழும் மாலவன் ஆயிரமலரால் ஏத்துவான் ஓர் மலர் குறையப் புகழினால் அவன் கண்ணிடந்திடலும் புரிந்து சக்கரங் கொடுத்தாய், வீரத்தால் ஒரு வேடுவனாகி விசையனுக்கு வான்படை கொடுத்தாய். முப்புர மெரிய உன்னை முன்னிய அம் மூவர்க்கும் பொன்னுலகாளப் புகழினால் அருளீந்தனை இவை கண்டடியேன் அகமும் வல்வினைக் கஞ்சி, வந்துனை யடைந்தேன்'' என வளவன் செங்கணான், பிறப்பைச் சிறப்பித்துத் தமிழ்ச் சொன்மாலை சாத்தினார். அங்கே சில நாள் வைகி வணங்கி, அருள் பெற்றுக் காவிரியாற்றின் தென்கரைமேல் திகழும் பதிகள் பலவும் பணிந்து,

முனைப்பாடித் தலைவர் திருவிடை மருதூரை யடைந்தார். அவ்வூரில் கோவிலடைந்து, மருதிடை யமர்ந்த பெருமான் திரு முன் நின்று, "இம்மானுட வாழ்க்கை புன்முனைப் பனி வெங் கதிர் கண்டாற் போலும். இது நிலை பெற்ற பொருளில்லை. முன் னமே உன் சேவடி சேரா மூர்க்கனுகிக் கழிந்தனகாலம் உன்னருளைச் சிந்தித்தே மனம் வைக்கமு மாட்டேன். இரப்பார்கட்குச் சிறி தொன்றும் ஈயேன். கடியவாயின கொடுமைகள் செய்தேன். குற்றம், செற்றம், வேட்கை இவை முதலாக விடுக்ககிற்றிலேன். வேண்டில் ஐம்புலன் என் வசமல்ல நமன்றமர் நரகத்திடலஞ்சி இடுக்கணுற்றனன் காவிரித் தென்கரை தன்மேல் இடை மரு துறை யெந்தை பிரானே! நீ எனக்கு உய்வகை யருளாய்" என மதுரச் சொன்மலர்கள் பன்னிப் புனைந்து, பணிந்தேத்திப் பாவிப் போந்து, தொண்டருடன் அந்நற்பதியிலிருந்து அகன்று திரு நாகேச்சரத்தை யடைந்தார். அக்கோவிலை வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் தொழுது, "செருநதி செம்பொன் மலரும் திருநாகேச்ச ரத்தானே! நீர் விட முண்டுகந்தீர். அருந்தவமா முனிவர்க்கு அருளாகி ஓர் ஆலதன் கீழிருந்து அறமே உரைத்தீர். பாலனதாருயிர்மேல் பரியாது பகைத் தெழுந்த காலனை விடு வித்தீர். இவை என்னை கொல்லோ?" என்று பதிகம் பாடினார். பின் அங்கிருந்து புறப்பட்டுச் சிவபுரத்தை யடைந்து வணங்கி, மனமுருகி வழியிலுள்ள பல பதிகளையும் பணிந்து கொண்டு திருக்கயிலை நல்லூரை யடைந்தார்.

(தொடரும்)

குறிப்பு

4-வது சிலம்பு 3-வது பரலில் வெளிவந்த பூ என்னும் கட்டுரை யாழ்ப்பாணம் நவாலி திரு. க. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதியது.

சுந்தரர்

[சிந்துபூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

முன் செந்தமிழ்ச் செல்வியில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் பெயர்கள் மாத்திரையானே விளங்கும் கருத்துக்களை எழுதினது போல "சுந்தரர்" என்னும் பெயர் மாத்திரையானே குறிக்கப்படும் கருத்துக்களைக் கூறுதல் இக்கட்டுரையின் நோக்கமாம்.

சுந்தரர் என்கிற பெயர் அவர் கைலாய மலையில் சிவபெருமானுடைய அணுக்கத் தொண்டராயிருந்த பொழுது வழங்கப்பட்டு வந்தபெயர். அவர் அப்பொழுது ஆலகால சுந்தரர் என்றும் ஆல சுந்தரர் என்றும் அழைக்கப்பட்டனர். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது உண்டான நஞ்சை அவர் தாங்கிச் சென்று சிவபெருமானிடத்துக் கொடுத்தமையால் ஆல சுந்தரர், ஆலகால சுந்தரர் என்னும் பெயர்கள் அவருக்கு உண்டாயின என்று பெரியோர் கூறுவர். அவர் சிவபெருமானது ஆணையால் திருநாவலூரில் அவதரித்த பொழுது அவருக்கு நம்பியாரூரர் என்னும் நாமம் அவருடைய தாய் தந்தையர் சாத்தினார்கள். அவர் சிவபெருமானால் திருவெண்ணெய் நல்லூரில் வலிய ஆட்கொள்ளப் பெற்றபொழுது "வன்றொண்டன்" என்னும் காரணப் பெயர் அவராற் கொடுக்கும் பாக்கியம் பெற்றார். திருவாரூரில் புற்றிடங்கொண்ட பெருமானை அவர் வணங்கின பொழுது "தம்பிரான் தோழர்" என்னும் திருநாமம் அவராற் கொடுக்கப் பெறும் பாக்கியம் பெற்றார். 'ஆளுடைய பிள்ளையார்' என்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் 'ஆண்ட அரசு' என்று திருநாவுக்கரசு சுவாமிகளும் அழைக்கப் பெற்றமைபோல அவர் 'ஆளுடைய நம்பி' என்று அழைக்கப் பெற்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய தேவாரப் பதிகங்களின் இறுதிப் பாட்டுகளில் சிவகடியப்பன், வனப்பகையப்பன், நாவலர்கோன், நாவலாரூரன், நாவலூரன், நாவலவூரன், நம்பி

யூரன், ஊரன், புகலூரன், தொண்டனூரன், அடித் தொண்டன், சடையன் சிறுவன், சடையன் காதலன், சிறுவன், நம்பி முதலிய நாமங்களாற் றம்மைக் குறித்தருளினர். சுந்தரர் என்னும் பெயரை அவர் எந்தப் பதிகத்திலும் வைக்கவில்லை. சேக்கிழார் பெருமானும் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசு நாயனர் புராணம் கக-வது பாட்டில் மாத்திரம் அவரை "ஆலால சுந்தரர்" என்று குறித்திருக்கிறார். பிற இடங்களில் சேக்கிழார் பெருமான் அவரை நாவலர் பெருமான், நாவலூராளி, நம்பியாரூரன், வன்றொண்டன், நாவலூர் மன்னன், பரவையார்தனித் துணைவன், நம்பி, திருத்தொண்டன் முதலிய நாமங்களாற் குறிக்கின்றாரே யன்றி சுந்தரர் என்னும் நாமத்தாற் குறித்ததாகக் காணவில்லை. திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பியும் தாம் அவர் பேரிற் பாடிய பதினொரு பாட்டுக்களிலொரு பாட்டிலாவது அவரைச் சுந்தரர் என்னும் பெயராற் குறிக்கவில்லை. ஆயினும் அவருக்குச் சுந்தரமூர்த்தி நாயனர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அல்லது சுந்தரர் என்னும் பெயரே தொண்டர்களால் சமய குரவர்கள் நால்வரிலொருவர் பெயராக வழங்கப் பட்டு வருகின்றன.

இனி "சுந்தரர்" என்னும் பெயரின் பொருளைக் கருதுவாம். சுந்தரம் என்னும் வடமொழி அழகு என்று பொருள்படும். சுந்தரர் என்பது அழகையுடையவர் அல்லது அழகர் ஆகும். சுந்தரமூர்த்தி என்பது அழகான உருவமுடையவர் என்று பொருள் படும். எங்கே இறைவன் அருள் விளங்குமோ அங்கே அழகு காணப்படும். திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய மூவரும் தாம் பாடிய தேவாரப்பதிகங்களில் இயற்கை அழகைப் பற்றி வர்ணித்துப் பாடியது இக்கருத்துப்பற்றியே. கண்கவர் வடிவ வனப்பு மாத்திரமல்லாமல் ஏனைய புலன்களைக் கவரும் அழகின் பாற்படும். உருவத்தின் மாத்திர மன்றி அருவத்திலும் சூக்குமமான அழகு உண்டு. கண்களைக் கவரும் அழகான மலர் என்று நாம் சொல்வது போல உள்ளத்தைக் கவரும அழகான எண்ணம் அழகான நெஞ்சம் என்று நாம் சொல்கிறோம். "அத்தனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்தவாறே" என்று திரு

நாவுக்கரசர் கூறியது காண்க. கிரேக்கர்கள் (Greeks) கடவுளின் அருட்டன்மையை இயற்கை அழகில் வைத்துக் காண்பதில் மிக்க தேர்ச்சி அடைந்திருந்தார்கள். அதனால் அவர்கள் சித்திரப் படம் எழுதுதலிலும் சிற்பவேலையிலும் மிக்க வல்லவரா யிருந்தார்கள். தமிழர்களும் நுண்கலைகளில் மிக்க வல்லவரா யிருந்தார்கள் என்பது பழைய கோயில்களிற் காணப்படும் சிற்பவேலைத் திறனும் பண்டைத் தமிழ்ப் புலவர் செய்யுள்களிற் காணப்படும் இயற்கை வருணனைத் திறனும் தேவாரப் பதிகங்கள் பண்ணுடன் பாடப்படும் இசைத்திறனும் நன்கு புலப்படுத்தும். தேவாரங்களிற் பல இடங்களில் சிவபெருமான், 'அழகன்' என்று துதிக்கப் பட்டிருக்கிறார். அவற்றிற் சில வருமாறு:—

குழவித் திங்கள் குளிர்சடை மருவவைத்த அழகன்
(நினைந்த திருநேரிசை)

அழகியரே ஆமாத்தூ ரையனாரே (திருத்தாண்டகம்)

அழகு அமர் வெண்ணி அம்மான்றன்னை.
(திருஞானசம்பந்தர் திருவெண்ணிப்பதிகம்)

அழகார் வுனக்காளா யினியல்லே னெனலாமே.
(சுந்தரர் திருவெண்ணெய்நல்லூர்ப் பதிகம்)

ஆகையால் சுந்தரர் என்பது ஊனக் கண்களாற் பார்ப்பவர்களுடைய கண்களைக் கவரும் திருமேனி அழகையும் சிவபெருமானுடைய திருவருள் விளக்கம் பெற்றதனால் ஞானக்கண்ணாற் பார்க்கக்கூடிய அழகையும் உடையவர் என்று பொருள்படும். இது தான் பொருள் என்பது சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திற் பாடிய

"கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளி யானெதிர் நோக்கும்"
(தடுத்தாட்கொண்ட புராணம். ௧௪௩-வது பாட்டு)

என்ற செய்யுளால் விளங்கும். முன்னையது சுந்தரருடைய திருமேனி அழகு; பின்னையது அவருடைய அருளொளி அழகு.

முன்னையது சிறிய இன்பங்கொடுக்கும்; பின்னையது பெரிய இன்பம் கொடுக்கும். "அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்" என்றார் திருமூலர்.

இத்தகைய அருள் விளக்க ஒளிபெற்ற சுந்தரர் பரவையார் சங்கிலியார் ஆகிய இவர்கள்பால் நேயம் வைத்தது எப்படிஎனின் அஃது அவருக்குப் பிராரத்துவம் காரணமாக அவ்விருவர்களுடன் கூடி வாழவே சிவபெருமான் ஆணையால் அவர் உலகில் அவதரித்தவர். பிராரத்துவங் காரணமாக வந்த செயலை விலக்கவல்லாரொருவருமில்லை. பிராரத்துவ காரணமாக அவர் எய்திய சிற்றின்பம் சிவபெருமானுக்கு ஆட்பட்ட அடிமைத் திறத்தை அற்பமேனும் பாதிக்கவில்லை என்பது அவர் சிவபெருமான் திருவருளே துணையாகக்கொண்டு அத்திருவருள் கூட்ட பரவையார், சங்கிலியார் இருவர்களையும் விதிப்படி மணம் புரிந்து அவர்களுடன் கூடி வாழ்ந்ததும் வேறு பெண்கள் மீது அவர் அணுவளவுங் காதல் கொள்ளா திருந்தமையும் புலப்படுத்தும். கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தொழுது தமது பெண்மக்களாகிய சிங்கடியார் வனப்பகையார் என்னும் இருவர்களையும் அடிமைகளாகக் கொள்ளவேண்டுமென்று வணங்கினபொழுது சுந்தரமூர்த்தி நாயனார் "இவர்கள் எனக்குத் தூயமக்கள்" என்று சொல்லி அவர்களைத் தமது தொடையில் வைத்து உச்சி மோந்தருளினார். அவர்களை தாம் பிதாவாகக் கொண்ட பெற்றியை அவர் தாம் பாடிய திருப்பதிகங்களில் சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்று கூறியருளினார். அவர் "பரமரைப் பண்டு தாம் பிரிந்தெய்துஞ் சேய நன்னெறி குறுகிட" திருவஞ்சைக் களம் அடைந்தபொழுது "பாசமடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டுமென்று" அன்பினிற் பாட சிவபெருமான் ஆணையின்படி அவரை வெள்ளானையி லேற்றிக் கைலைக்குக் கூட்டிக் கொண்டு வர தேவர்கள் அங்கே வந்தார்கள். அப்பொழுது அவர் பரவையார், சங்கிலியார் ஆகிய இருவர்களைப் பற்றி அற்பமேனும் மனதில் எண்ணவில்லை.

சுந்தரமூர்த்திநாயனார் "காணுங்காணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணும்" யோகியார் (ஞானயோகம்) ஆவர்.

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற"

என்று திருவுந்தியாரினும்,

"உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கிற்—றொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
இளைப்பதுமொன் றில்லை யிவர்"

என்று திருக்களிற்றுப்படியாரினும்

"யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூப முற்றிடு முள்ளத்தோர்
போகம் புருடார்த்த சித்திய
தாகு மிரண்டு மழியாத யோகிக்கே"

என்று திருமந்திரத்திலும்

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச் செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்றும்
அவர்திற நீங்கா ரதற்கு.

என்று சிவஞானபோதத்திலும் கூறியபடி, நம்போலியர்க் கிருப்பதுபோன்று யோகிக்கு சிற்றின்பமெனப் பேரின்பமென இன்பம் இருவகையா யிருப்பதில்லை. அவர்கள் எக்காரணங்களால் இன்பம் அனுபவிப்பினும் அது பேரின்பமேயாகும். அவர்கள் இறைவன் திருவருளா னல்லதொன்றையுங் காணாதவர்களாய் அவ்வருளின் வழியே நின்று எப்பொருளையுங் காண்பவர்களாதலின் தங்கள் வினையின் கூட்சியால் ஐம்புலன்களின்வழி இன்பம் அனுபவித்தாலும் அவ்வின்பத்தையும் பேரின்ப வகையாகக் கொள்வாரன்றி ஐம்புலன்களாற் றொடக்குண்டு நிற்பாரல்லர். ஆகையால் சுந்தரமூர்த்திசுவாமிகள் தம் வினைவயத்தால் பரவையார், சங்கிலியார் என்னும் இரண்டு பெண்களையு மணந்து அவர்களுடன் உலகில் கூடி வாழினும அஃது அவர் அடைந்திருந்த இறைவன் திருவருள்

விளக்கநிறைவை அற்பமுங் குன்றும்படி செய்யவல்ல தாகாது. இக்கருத்தை சேக்கிழார் பெருமானும் பெரியபுராணத்தில்,

"தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் றிருவருளால்
மின்னாருங் கொடிமருங்குற் பரவையெனு மெல்லியறன்
பொன்னாரு முலையோங்கற் புணர்குவட்டே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்.

என்றும்,

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியினுஞ் சிந்தையினு மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னாளுடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்"

என்றும் கூறியருளினார்.

சைவர்கள் எல்லாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தெய்வச் சரிதையை ஓதி உணர்ந்து அவரைத் தங்கள் உலக வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாகக் கொண்டு இயன்றவாறு ஒழுகல் வேண்டும். அவர் இல்வாழ்க்கையிலிருந்து கொண்டே அருளொளி தம்மிடம் விளங்கவும் உலகில் விளங்கவும் ஒழுகினது போல அவர்களும் இயன்றவாறு ஒழுகல் வேண்டும். அவர்கள் தங்கள் இல்வாழ்க்கையை நெறிப்பட ஒழுகி பேரின்ப நிலைக்கு வேண்டப்படும் குணங்களெல்லாம் தங்களிடம் உண்டாகி விருத்தியடையும்படி செய்துவரல் வேண்டும்; சிற்றின்பங்களையும் பொருளையும் பெரிதாக மதித்து அவைகளில் அதிகமான பற்றுவைத்து சுழன்று உழலாமலிருத்தல் வேண்டும். அவர்கள் தங்கள் எண்ணங்கள் இச்சைகள் செய்கைகள் எல்லாம் அறிவுடையாருடைய உள்ளம் கவரும் அழகையுடையதா யிருக்கும்படி ஒழுகல் வேண்டும். இப்படி சைவர்கள் உலக வாழ்வில் ஒழுகுவதே சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு அவர்கள் செய்யும் உண்மைவழிபாடாகும். இவ்வுண்மை வழிபாடு செய்ய சிவபெருமான் அவர்களுக்கு அருள் புரிவாராக.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடிகளே சரணம்.

அறம்

[சந்திரசேகரப்பாவலர்]

இவ்வுலகத்தே உயிர்கள் அடைதற்கரியதாய் விண்ணவரும் நண்ணுதற்கெண்ணும் பிறப்பு மனிதப் பிறப்பே. அது பெற்றும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தலரிது; அவ்வாறு நீங்கிப் பிறப்பினும் நல்லாசானை யடுத்து உற்றுழி யுதவி வழிபாடு செய்து கற்று நிற்றல் மிகவரிது.

இறைவன் திருவாய் மலர்ந்தருளிய நல்லற நூல்களிற் கூறியபடி மனத்துக்கண் மாசில்லாமல் பொறாமை, அவா, வெகுளி, கடுஞ்சொல்லாகிய இந் நான்கினையுங் கடிந்து வாழ்நாள் வழியடைக்குங் கல்லும் மெய்யின்பந் தருவதும் சிறப்புஞ் செல்வமும் பயப்பதுமாகிய அறத்தினை, இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையாவாகையால நாடோறுஞ் செய்யவேண்டும். அற்றது பெரியோரால் வரையறுக்கப்பட்ட ஒழுக்கமே. அஃது இல்லறம் துறவறமென இரண்டு.

இல்லறமென்பது நற்குண நிறைந்த கற்புடைய மனைவியோடு அன்பும் அருளும் கொண்டு விருந்தினரையும் அருந்தவரையும் இனிய சொல்லோடு ஏற்று மகிழ்வித்து எல்லோரும் தன்னைப் புகழும் படிக்காகப் பிறர்மனை விரும்பாது நல்லபிள்ளை பெற நோற்றிருக்கும் தன்மையது.

இல்வாழ்வான் முன் கூறியபடி இல்லற நடாத்துவதோடு இன்னும் பல அரிய குணங்களையும் கொண்டிருக்க வேண்டும். தனக்குப் பிறர் செய்த கொலையொத்த தீமையையும் பொறுத்துப் பொன்றுந் துணையும் புகழ்படைத்து அவர் செய்த தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாகக் கருதி எழுமையும் மறவாது மனத்தைத் தீநெறிக்கட் செல்லாது அடக்கி உலகத்தோடொட்ட ஒழுகுதல் வேண்டும். பிறர் பொருளை வெஃகாது பிறருக்குப் பகுத்துண்டு புறஞ்சொற்கடிந்து தீமை செய்ய அஞ்சியவனாய் நன்மையையே நாடவேண்டும். இவ்வாறு இல்லறம் புரிதலின் நல்லறம் பிறிதொன்றின்று. அவ்வில்வாழ்வோனே வீடு கருதி முயல்வாருளெல்லாந் தலை.

இனி, துறவறம் என்பது, கல்வி கேள்விகளில் முதிர்ந்து இல்லந்துறந்து நிலையாமையுணர்ந்து பொருளும் இன்பமும் நீக்கி அருளுடன் உடற்பிணியாவும் பொறுக்கும் மனவாற்றலோடு தேவரும் வியக்கும் பேரொழுக்கமும், வாய்மையும், தவமும், தூய்மையுங்கொண்டு புல்புழு முதலிய துயருறினும் பரிந்தோம்பி வெயிலென்றும் மழையென்றும் பாராது பல இடங்களிலும் அலைந்து ஊணுமொழித்து சருகுண்டு காணீர் குடித்து இவ்வாறு ஒழுகும் தன்மையது. இவ்வாறு துறவறத்துப் பிறனுற்பழிக்கப் படாது வாழ்பவனும் இல்வாழ்வானைப் போலவே வீடுகருதி முயல்வாருளெல்லாந் தலைவைத் தெண்ணப்படும்.

இல்லறந்துறவற மிரண்டும் வீடு தருவனவே. திருநீலகண்டர், இயற்பகையார், இளையான் குடிமாற நாயனார், அமர்நீதி நாயனார், அப்பூதியடிகள் முதலிய சிவனடியார் இல்லறத்திருந்தும் திருநாவுக்கரசு நாயனார் மெய்கண்ட தேவ நாயனார் மாபாடியம் சிவஞான முனிவர் முதலிய திருத்தொண்டர் துறவறத்திருந்தும் வீடடைந்தவர்கள்.

முன்னோர் முன் கூறியபடி அறமியற்றியதால் மட்டும் வீடு மற்றும் பெற்றனரா? இல்லை, இல்லை, அத்துடன் இறைவனடிக் கன்பு செய்தமையாலேயேயாம். மேற்கூறியபடி இல்லறத்தேனும் துறவறத்தேனும் நின்று முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகிய சிவபெருமானை மனத்தால் நினைந்து வாக்காற்றுதித்துக் கைகளாற் பல மலர்களைக்கொண் டர்ச்சித்து வழிபட்டு வாழும் செயலாகிய அறமுடையனேல் இறைவனும் அருளும், இதனாலே அரனடிக்கன்பு செய்கையே மாண்பறமெனப்படும் சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியரும்,

"காண்பவன் சிவனே யானு லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மரன்றன்பாத மறந்துசெய் யறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விரும்பொன் றில்லான்
பூண்ட னன்வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே."

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார். மேலும் உலகினர் பாவமெனக் கருதும் தீச்செயல்களும் அரனடிக் கன்பு காரணமாகச் செய்யின் அறமேயாம். நரரினிற் பாலராகிய தண்டீசநாயனார் சிவ

பூசைக்கு இடையூறுசெய்த தந்தையார் காலைத் தண்டத்தாற் றடிந்த செய்கை அதிமேன்மையான புண்ணியமாகச் சிவபிரானாற் கொண்டாடப்பட்டு அவருக்கு அடியாரியாருமடைய வொண்ணாத பெரும்பதவியை யீந்தது. அரனடி மறந்துசெய்யும் புண்ணியமும் பாவமேயாகும். பிரமன் மகனாகிய தக்கன் இறைவனடி மறந்துசெய்த வேள்வியும் இறைவனாற் பெரும்பாவமாக இகழப் பட்டு அவனுக்குப் பெருங்கேடு தந்தது.

மேலும் இந்திரன் முதலிய விண்ணவர் பதங்களியாவும் அழியும் தன்மையன. இந்திரன் பலகால் சூரபதுமன் முதலிய வசுரரால் தன் பதமிழந்து தவித்தனன். ஒரு காலத்து பொன்னாடு பானுகோபனால் சாம்பராக்கப்பட்டது. இந்திரன் மகனாகிய சயந்தன் பானுகோபனால் சிறையிடப்பட்டான். ஆகையால் இறைவனருளும் வீட்டின்பமே என்றும் அழியாச்செல்வமாம். கல்வியிற் பெரியாராகிய கச்சியப்ப சிவாசாரியரும்,

"காடுபோந்தன விந்திரன் பொன்னகர் கரிந்து
பாடுசேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடப்பட்டன
னாடல்விண் பதச்செய்கை யீதெம்பிரா னல்கும்
வீடதேயலாற் றுன்பறும் ஆக்கம் வேறுண்டோ"

என்றார் கந்தபுராணம் அமரர் சிறைபுகு படலத்து.

இதுகாறு மெழுதியவற்றால், பெறற் கரிதாகிய மனிதப் பிறவி பெற்றார், இன்பங்கருதிக் கடைப்பிடித்தொழுக வேண்டியது இல்லறந் துறவறமென்ற விரண்டு ளொன்றென்பதூஉம், மெய்யின்பம் பயப்பன இந்திரன் பரமன் முதலிய வானவர் பதங் களல்லவென்பதூஉம், அழியா இன்பந்தருவது சிவபிரானருளும் வீடொன்றே யென்பதூஉம், அவ் வீடு தருவது அரனடிக்கன்பு செயலாகிய மாண்பற மொன்றே யென்பதூஉம், உள்ளங்கை நெல்லிக்கனியேபோ லறியலாம். ஆகையால் நமனுடை முறை நாளாவதிது வென வறியாத நாம் நாளை நாளையென்னாது நல்லொழுக்க முடையவராய் இன்னே இறைவனடிக் கன்பொடு பூசனை யாற்றித் திருவருளா லென்றுங் குன்றா வின்பம் பெறுவோமாக,

பால யகுருதுதர ரோக அபியுக்த சிகித்சை

A rational treatment of the Infantile cirrhosis of the Liver

குழந்தை பால்மாந்தக் கட்டி

[ஸ்ரீகாழி. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் எழுதியது]

பால யகுருதுதரம், யகுருத்தாலீ என்று சாஸ்திரங்களிற் சொல்லப்படும் வியாதியைக் கல்மாந்தம், மாந்தக்கட்டி, கல்லீரல் பெருக்கம், பால் மாந்தக் கட்டி என்று ஜனங்கள் கூறுவார்கள். குழந்தைகளுக்கு இவ்வியாதியா லுண்டாகும் ஈரற் பெருக்கத்திற்கும், விஷம ஜ்வரத்தாலும் காள ஜ்வரத்தாலும் பெற்றோர்களுடைய மதுபானப் பழக்கத்தாலும் கர்ப்பத்தில் மேக ஊறலாலும் கொறுக்கைப் புண் முதலியவற்றாலும் உண்டாகும் ஈரற் பெருக்கத்திற்கும் பேத முண்டு. யகுருதுதரம் வேறு, பிளீகோதரம் வேறு. யகுருதுதரத்தில் ஈரல் (Liver) பெருத்திருக்கும். பிளீகோதரத்தில் சுவரொட்டி (Spleen) பெருத்திருக்கும். குழந்தைகளுக்குக் காணும் பால் மாந்தக்கட்டியில் ஈரல் முதலில் பெருக்க ஆரம்பித்துச் சிலகாலத்திற்குப் பிறகு சுருங்கிப் போய் அடிவயிற்றில் வீக்கங்காணும். ஆங்கில வைத்தியர், இந்நோயை Infantile cirrhosis of Liver என்பர். Cirrhosis என்னும் பதம் மஞ்சள் நிறம் என்று அருத்தப்படும் கிரேக்க பதத்திலிருந்து வந்தது.

இந்த ரோகத்தின் நிதானம் பூர்வரூபம் ரூபம் உபசயம் ஸம்ப்ராப்தி யாகிய பஞ்ச லக்ஷணங்களையும், இதற்குச் சிகித்சையும் விவரிப்பதற்கு முன் சீரண உறுப்புக்களின் விவரத்தையும் தொழிலையும் அவற்றைப் பேணும் முறையையும் தாய்மார் சிறிதளவு அறிந்திருத்தல் வேண்டும். எலும்பு முதலிய சரீரக் கூறுகளுக்கும் (தாதுக்கள்) உண்ணும் உணவுகளுக்கும் பதார்த்தம் அளவில் மிகுந்த வேற்றுமை உண்டு. உணவு சரீரக் கூறு ஆவதற்கு முன் பல மாறுதல் அடையவேண்டும். அம்மாறுதலில் முதல் வேறுபாடு சீரண உறுப்புக்கள் வாய், பல், உமிழ் நீர்க் கோளம் (Salivary glands), மிடறு, இரைக்குழல், இரைப்பை,

குடல்கள், ரசாயனி (Lacteal), ரசதாரை (Thoracic Duct,) ஈரல் (Liver], கணையம் (Pancreas) என்பன. இவற்றுள் ஈரல் உடலின் வலதுபக்க விலாவிற்குள் வலது சுவாசப் பையின் கீழ் உள்ள கரிய சிவப்பான ஒருறுப்பு. பித்தநீர் இதிற் பிறக்கும். இதன் கீழ்ப் பித்துப்பை இருக்கும். பித்தநீர் மஞ்சள் நிறமும் கசப்புச் சுவையும் உள்ளது. சரீரம சுகமாயிருக்கும் நிலைமையில் பித்தம் இரைப்பைக்குட் செல்லாமல் துணைக்குக்கியிற் செல்லும்.

ஆகாரம் பற்களாலும் உமிழ் நீராலும் முதல் மாறுதல் அடையும். இரண்டாம் மாறுதல் பாசக நீராலும் (gastric juice) இரைப்பையாலும அன்னப் பாகாதல். (chyme) மூன்ரும மாறு தல் துணைக்குக்கியில் அன்ன ரசமாதல் (chyle) நான்காம் மாறு தல் ரசாயனி ரசதாரை ரக்தாசயம் (Heart) சுவாசப்பை (Lungs) இவற்ருல் இரத்த மாதல். ஐந்தாம மாறுதல் மலம் பிரிந்து கழி தல். இம்மாறுதல்களில் இங்குத் தாய்மார்கள் கவனிக்கவேண் டியது அன்னப்பாகு துணைக்குக்கிக்குட் சென்று பித்த நீரோ டும் கணைய நீரோடும் (Pancreatic juice) கலந்து அன்ன ரச மாகவும் மலமாகவும் மாறும் மாறுதலேயே. இந் நிலைமையில் தொழிற்படும் முக்கிய உறுப்பு கல்லீரல் என்பது மேலே குறித் தோம். ஆதலின் குழந்தையின் ஈரல் விவரமும் தொழிலும் அத னைப் பேணும் முறையும் பெற்ருேர் அறிந்திராத நிலைமையில் குழந்தையைப் பாதுகாத்தல இயலாது.

குழந்தையின் சரீரசுகமும் சீரணிசக்தியும் ஒழுங்காக நடக் கும்படி தாய்மார் அதறகு ஊட்டவேண்டிய ஆகாரத்தின் அள வையும் காலத்தையும் அதன் வன்மையையும், ஊட்டவேண்டிய விதத்தையும், ஊட்டுங்கால் உடம்பு இருக்கவேண்டிய நிலையை யும் கவனித்தல் ஆவசியகம். சிசுவின் வயது தொழில் பழக் கம் சரீரநிலை குளிர்ச்சி சூடு சுகம நோய் இவற்றிற்கேற்ப, ஆகா ரத்தின் அளவு பேதப்படும். குழந்தையைப் போஷிக்கத்தக்க அளவே ஏற்ற அளவு. அதன் சரீரக்கூறு வளர்ந்து சுகத்தோடு இருக்கத் தக்க போசனப் பிரமாணத்தை நிதானித்து அறிந்து கொள்ளல் வேண்டும். சரீரத்திலுள்ள உறுப்புக்கள் அனைத்தும்

தங்கள் கழிவின் குறைவை நிரப்பும்படியும் தாதுக்கள் வளரும்படியும் ஆகாரம் அவசியமானது. குழந்தையின் தேகக் கழிவின் குறைவை நிரப்புவதற்கு அதன் தேகத்தில் இயல்பாக உண்டாகும் வேட்கை தான் பசி. அந்தப் பசிக்குத்தக்க அளவிலே ஏற்ற காலத்திலே குறைவை நிரப்புவதற்குப் போதுமான உணவைத் தாய்மார் ஊட்டி வளர்த்தல் வேண்டும். பிரமாணத்துக்குமேல் நிரம்ப ஊட்டுவதாலும், குறையை நிரப்புவதற்கு ஏலாத அளவு ஊட்டுவதாலும், சுகவீனம் உண்டாகும். சரீர அனல் எப்பொழுதும் ஒருபடித்தா யிருப்பதற்கு, சீரண உறுப்புக்களின் நிலைமைக்கும் காலத்திற்கும் தேக சுபாவத்திற்கும், வயதுக்கும் தக்கபடி, தேகத்தில் விளையும் நய நஷ்டங்களுக்குப் பொருந்துமாறு உணவு அருந்துதல் வேண்டும். குழந்தைகளின் ஈரலும் இரைப்பையும் மிகவும் நொய்மையானவை. அவ்வுறுப்புக்கள் தங்கள் வலிமைக்கு மேற்பட்டுத் தொழில் செய்யும்படியான ஆகாரத்தை ஊட்டுதலால் சுகவீனம் உண்டாகும். இவற்றைத் தாய்மார் கருதாது இருப்பதே குழந்தைகளின் சுகவீனத்திற்கு முக்கிய ஆஸ்பதம் ஆகும்.

ரோக விநிச்சயம்

நமது பிரதேசங்களில் இன்ன ஜாதியார்க்கு, இன்ன சமயத்தாருக்கு, இன்ன ஆகாரம் உட்கொள்வார்க்கு, இன்ன இடத்து, இன்ன பெற்றோர்கள் பெற்ற சிசுக்களுக்குத் தான் மாந்தக்கட்டி உண்டாகின்றது என்ற நியமம் இல்லை. இவ்வியாதி ஆண்குழந்தைக்குத் தான் அல்லது பெண் குழந்தைக்குத்தான் உண்டாகும் என்ற நியதியும் இல்லை. ஆயினும் ஆறு மாசத்திற்கு மேற்பட்டு இருபத்தேழு மாசத்திற்கு உட்பட்டுள்ள பாலர்களுக்கே இப்பிணி பெரும்பாலும் உண்டாகிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இப்பிணி மூன்று மாதகால அளவு முதல் பதினெட்டு மாதகால அளவு வரை நீடித்து இருக்கும். இப்பிராய அளவுக்கு முற்பட்ட இளங் குழந்தைகளுக்குப் பூவுதய காலத்திலேயே பித்துப்பையும் பித்துக்குழாயும் அடைபட்டு மாந்தக் கட்டி போன்ற ஓர் நோய் உண்டாகும். இப்பிராய அளவுக்குப்

பிறபட்ட குழந்தைகளுக்கு விஷ அணுவிலிருந்து உண்டாகும் இரத்த சம்பந்தமான சீர்கேட்டால் பால் மாந்தம் போன்ற மற்றோர் நோய் உண்டாகும். குழந்தைகள் உண்ணும் போசனத்தில் சீவாதார வஸ்துக்கள் இன்மையால் கட்டி போன்ற பிறிதோர் நோய் உண்டாகும். சிசுவின் வயிற்றுக்கும் குடலுக்கும் ஒவ்வாத ஆகாரத்தால் அல்லது பிற காரணத்தால் அல்லது ஜீர்ணக் குறைவால் விஷவஸ்துக்கள் இரத்தத்தோடு கலந்து கல்லீரல் வழியே புகுந்து செல்லும்போது அக்கல்லீரலில் கட்டிபோன்ற வேறோர் நோய் உண்டாகும். இந் நான்கு நோய்களின் வேறாகிய யகுருதுதர ரோகமே இங்கு நாம் எடுத்துக் கொண்டது.

இந்தப் பால்மாந்தக் கட்டி ரோகத்தின் ஹேது முதலியவற்றை நிதானிப்போம். உணவுப் பொருட்களுட் சிலவற்றைக் குழவிகளுக்குக் கொடுத்த மாத்திரம், அப்பொருட்கள் சீரணிக்கின்ற காலத்தில் இளைய நொய்ய ஈரலுக்கு வேலை கொடுக்கின்றன. அப்பொருள்கள் ஜீர்ணித்து இரத்தத்திற் சேருங்காலத்தில் அவ்வீரலில் அதிக இரக்தம் சேருகின்றது. அவ்வாறு இரக்தஞ் சேருகின்ற காலத்தில் அவ் விரத்தத்தில் கலந்துள்ள பொருள்களைத் தனித்தனி ஈரல் பிரித்துப் பலவகை மாற்றங்கள் அடைதற்குப் பிற வுறுப்புக்கு அனுப்புகின்றது. சிற்சில பொருள்கள் ஈரலுக்கு மட்டுக்கு மிஞ்சின வேலையைக் கொடுக்கின்றன. இதனால் ஈரலில் சில சீர்கேடு உண்டாவது சகஜமே. அளவுக்கு மிஞ்சிய ஆகாரமும், தேகத்திற்கு ஒவ்வாத ஆகாரமும், நேரம் அல்லாத நேரத்தில் கொடுக்கும் ஆகாரமும் இவ்வகுப்பிற் சேர்ந்தவை. அளவுக்கு மிஞ்சிய ஆகாரம் ஈரலுக்கு அளவுக்கு மிஞ்சிய வேலையைக் கொடுத்து ஈரலைப் பெருக்கச் செய்து கெடுக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சிசுவின் தேக நிலைக்குத் தக்க ஆகாரம் சுகசரீரியாய் இருக்கும் மாதாவின் முலைப்பாலே. 'பீரம் பேணி பாரந் தாங்கும்' என்பது **கொன்றைவேந்தன்**. மாதாவின் சுகவீனத்தாற் கெட்ட பாலோ அல்லது தாய்ப்பால் தவிர மற்றை உணவோ ஈரலுக்கு மட்டுக்கு மிஞ்சிய வேலையைக் கொடுத்து ஈரலைப் பெருக்கச்

செய்து கெடுக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? தாய்ப் பாலுக்குள்ள அமிர்தத் தன்மை பசுவின் பாலுக்கேனும் மாப் பண்டங்களுக் கேனும் மதுரவஸ்துக் களுக்கேனும் உண்டாமோ? அரிசிக் கஞ்சியையாவது யவக் கஞ்சியையாவது பசுப்பாலையா வது மா முதலியவை கலந்த திரட்டுப் பாலையாவது சவ்வரிசிக் கஞ்சியையாவது தாய்ப்பால் அன்றிக் கொடுத்தால், அவை இயற்கைக்கு மாறுன ஆகாரங்கள் ஆவனவே யன்றி இயற்கைக் குப் பொருத்தமான ஆகாரங்கள் ஆகுமோ ? தாய்ப்பால் இல் லாதபோது மற்றைப் பால்களோடு சர்க்கரை கலந்து ஆவ தென்ன ? கெட்டுப்போன புட்டிப்பால் முட்டுக்கு ஆகுமோ ? மாதம் ஏற ஏறச் சிசுவின்குடல் வலுக்க வலுக்க ஈரல் உரக்க உரக் கத் தாய்ப் பாலோடு எளிதில் செமிக்கத்தக்க உணவுப் பொருள் களை நமது முன்னோர் சேர்த்து வந்தார்கள் என்பதைக் காதாலா வது கேட்டு அவ்வண்ணமே இக்காலத்துச் சிசுக்களையும் வளர்க்க வேண்டாவோ ? பல் முளையாத குழந்தைகளையும் முளைத்த குழந்தைகளையும் ஒரு வயதுக் குட்பட்ட குழந்தைகளையும் மேற் பட்ட குழந்தைகளையும் எந்தெந்த நேரங்களில் எந்தெந்த ஆகா ரங்களால் நமது அன்னைமார் பரிபாலித்து வந்தார்கள் என் பதைக் கேட்டறிந்து, அவ்வாறே நாமும் நமது குழந்தைகளைப் போற்றிவரக் கடமைப் பட்டிருக்கின்றோம் அல்லவா ?

அகால போஜனமும் அமித ஆகாரமும் அசௌக்கியத்திற் குத் தாய், காலபோஜனமும் மிதமான தக்க ஆகாரமும் சௌக்கி யத்திற்குத் தாய். திடகாத்திரமுள்ள தாயின் முலைப்பாலே குழந் தை வாய் வைத்து உறிஞ்சிக் குடிக்கையில் அமிர்தம் ஆகின்றது. தாய்ப்பால் கெடுதல் அடைந்து இருந்தால், அஃது எதனுல் என்று முன்னர் கண்டறிந்து அதனைச் சௌக்கியப் படுத்தல் வேண்டும். இளங் குழந்தைகளையுடைய தாய்மார்கள் தங்கள் தேக சௌக்கியத்தையும் போஜனுதிகளையும், தேக உழைப்பை யும் கிரமப்படுத்தி, பள்ளியறையையும் சுத்தமாக வைத்துக் கொள்ளல் வேண்டும். புருஷ சம்சர்க்கம் இந்நிலைமையில் தங்கள் தேகத்தையும் கருப்பாசயத்தையும் பலவீனப் படுத்துவதன்றி, முலைப்பாலின் திரவரூபத்தை மாற்றி உச்சியிடித்துப் பாலைத்

திரித்து விடுமாதலால், அச்சம்சர்க்கத்தை மிதமாகக் கோடல் வேண்டும். பல் முளைத்த பின்னர்க் குழந்தையின் தேக நிலைக் கேற்ற இதர ஆகாரங்களைக் கொடுத்து வரலாம். குழந்தையின் ஈரலைச் சுலபமாகக் கெடுக்கக் கூடியவைகளில் பசுவின் பாலும், மாவேனும் எருமைப்பாலேனும் கலந்த பசுவின் பாலும், கொதிக்கக்காய்ச்சின பசுவின் பாலும் ஆகும். இவற்றை உட்கொண்ட மழவிளங்குழவியின் நொய்ய ஈரல் அதிகவேலை செய்து பார்த்துப்பருத்துக் கடைசியில் சிறுத்துப்போகிறது.

ஈரல் பருத்த பின்னரே இவ்வியாதி உண்டாகி விட்டது என்று துணிகின்றார்களே யொழிய, பெற்றோர் அதற்கு முன்னமே தெரிந்து கொள்வது இல்லை. குழந்தைக்கு இருமல் உண்டாயினும், கொடுக்கும் ஆகாரம் அதற்கு ஒத்துக்கொள்ளாவிடினும், வாந்தி செய்யினும், வயிறு உப்பியிருப்பினும், வயிற்றுப் போக்கும் மலபந்தமும் மாறி மாறி வரினும், சில நாள் மிகுந்த பசியுள்ளது போல் காட்டிப் பிறகு சில நாள் பசிமந்தம ஏற்படினும், தூக்கம் சரியானபடி இல்லாவிடினும், முகக்குறி மாறி வெளுத்துக் காட்டினும், தேகம் கத கத என்று இருப்பினும், மூத்திரம் குறைந்து செந்நிறமாயிடினும், இவையனைத்தும் மாந்தக்கட்டிக்கு முன்னறிகுறிகள் என்று நிச்சயமாய் எண்ணல் வேண்டும். இதற்கு மேல் மலபந்தம் அதிகப்படும். பேதிக்குக் கொடுத்தால் தான் மலம் பிரியும், மலத்தின் நிறம் மண்போன்று இருக்கும், பலநிறம் காட்டும். அதற்கு மேல் என்ன? ஈரல் சிறிது சிறிதாகப் பருத்து முடிவில் பெருத்துப் போகும். நீர் சிவந்து குறைந்த அளவில் இறங்கும். முகம் தேகம் கால் வெளுத்துச் சக்தியற்றுப் போகும். பழுவெலும்பை எண்ணிக் கணக்கிடலாம். நாளம் (veins) புடைத்துத் தோன்றும். இவ்வாறு ஆனபின்னர்த்தான் ஈரல் சுருங்கும். ஈரலில் வலியுண்டாகும் காய்ச்சல் ஒரே நிதானத்தில் இருக்கும். மஞ்சட்காமாலை காணும், தேகம் முழுவதும் நிறம்மாறி நமைச்சல் உண்டாகி, மூத்திரம் மலம் மஞ்சள் நிறமாகி, பிறகு மலம் சளித்துப்போகும், அதன் பிறகு ஜலம் வயிற்றில் இருப்பதாகத் தோன்றும் இதற்கு மேல் இருமல் கபஜ்வரம் கண்டு முடிவைத் தரும்.

ஸிகிச்ஸா க்ரமம். A. தடுக்கும் உபாயம்

இந்த ரோகத்தை வரவொட்டாமற் றடுப்பதே நலம். தாய் தன் ஆகாரத்தையுந் தேகசுகத்தையும் செம்மைப் படுத்தித் தன் பாலைச் சுகமாக வைத்துக்கொண்டு அப் பாலாலேயே தன் இளங் குழந்தையை உண்ணச்செய்து போஷித்து வருதல்வேண்டும். ஓராண்டின்பின் குழந்தை வளரவளர அதன் தேகநிலைக் கேற்ற உணவுகளை முன்கூறியவாறு கொடுத்து ரக்ஷித்துவரல் வேண்டும். ஈரலுக்குத் தடைசெய்யக்கூடிய எப்பொருளையும் எம் முகாந்தரத்துங் கொடுக்கலாகாது. காற்று வெளிச்சம் அப்பியாசம் ஆகாரம் பானம் ஆடை சீதோஷ்ணம் படுக்கை நித்திரை ஸ்நானம் இவற்றால் குறைவுண்டாகாதபடி குழந்தையைப் பராமரித்தல் வேண்டும். பால்புகட்டி வளர்க்க நேரிடினும், செவிலித்தாயைக் கொண்டும் போஷிக்க வேண்டினும், குழந்தையின் சுகம் கெடாதபடி எச்சரிக்கையா யிருக்கவேண்டும். ஸ்தன்யபானம் செய்விக்கும சுத்த நிலைகளைச் சாவதானமாகப் பேணல் வேண்டும். தாய்ப்பால் கிடைக்காத காலத்தில் பசுப்பாலையேனும், ஆட்டுப்பாலையேனும், கழுதைப்பாலையேனும், தாய்ப்பாலுக்கு ஒப்பமாற்றி உண்பிக்கவேண்டும். பசுப்பாலுக்கும் தாய்ப்பாலுக்கும் அதிக பேதமிருப்பதால், பசுவின்பாலைத் தாய்ப்பால் அளவுகுணம் உள்ளதாகச் செய்தற்குக் குழந்தையின் வயதளவிற்கேற்ப, பசுப்பாலோடு கிரீம், லாக்டோஸ், சுண்ணும்புஜலம், சுத்தஜலம் இவற்றைக் கலந்து, அந்தக் கலவையில் ஒரு அவுன்ஸுக்கு ஒருகிரேன் சோடியம் சிட்ரேட்டைச்(Sodium citrate) சேர்த்துக் கொடுக்கலாம். திருஷ்டாந்தமாக மூன்றுமாதக் குழந்தைக்கு இரண்டரை அவுன்ஸு தனிப் பசும்பாலோடு இரண்டரை அவுன்சு கிரீமும், ஒரு அவுன்சு லாச்டோசும், ஒரு அவுன்சு சுண்ணும்பு ஜலமும், பதினாறு அவுன்சு சுத்த ஜலமும், ஒரு கிரேன் சோடியம் சிட்ரேட்டும் கலந்து கொடுக்கலாம். வயது ஏற ஏறப் பாலை அதிகமாக்கிக்கொண்டு அந்த அளவில் மற்றையவற்றைக் குறைத்துக் கொள்ளலாம்.

நமது நாட்டுப் பழக்கப்படி பசுவின்பால் முதலியவற்றைச் சுத்தஞ்செய்து கொடுக்கும் முறைகள்.

பசுவின்பால் முதலியவை குழந்தைக்குக் குணந்தருதல்

துத்தியின் பூநொச்சி தும்பை துளசிமலர்
சுத்தி பசும்பாற்குச் சொல்.

தைவேளை பூச்சேரத் தாய்ப்பா லினைத்தாகும்
மெய்வேளை யான்பால் விரும்பு.

கொதிநீரு முப்புங் கொழுத்தபசுப் பாலை
யதிபக்கு வந்தாணுக் கும்.

சத்துமாத் தெண்ணீர் சமன்கலந்த வாவின்பால்
மெத்த சுகந்தருமே மேல்.

அத்திக்காய்ச் சாற்றோடே யாவின்பால் சேர்ந்தக்கால்
அற்றைமலச் சிக்க வறும்.

நெல்லி யிலைச்சாற்றி னோர்ந்தவாட் டுப்பாலாற்
புல்லியகா மாலையது போம்.

கத்தபத்தின் பாலிற் கலந்த வதிமதுரம்
மெத்த கனலகற்று மே.

* அதிமதுரஞ் சங்கம்வே ரானசம் பிரம்
மதிபசுப்பால் காமாலை மாற்று.

வெந்ததோ ரோமம் வெறுவியவே லப்பசும்பால்
சந்தோடந் தானே தரும்.

பிட்டவித்த கர்ப்பூர வல்லி பிழிச்சாறு
தட்டிவிடும் மாந்தந் தனை.

(தொடரும்)

* இதன் தெளிமோர் (whey) எளிதிற் சீரணிக்கக் கூடியது.

பிரேமதாமர்

[மயிலை சீனி கோவிந்தராசனார்]

(௨௮௯-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம :—(மறுத்து) "இல்லை. இல்லை. எப்படி யேனும்
சொல்லிய நாளில் செல்லுவன் பிரேமன்;
உயிரைப் போற்றல் உயர்வென் றெண்ணான்.
உயிரினும் நாவையே உயர்வாப் போற்றுவன்;
என்றே என்மனம் நன்றே அறியும்!
(பிரேமனைப் பார்த்து)

"சுற்றமும் இவனுடைச் சூழ்ந்த நண்பரும்
மற்றிவன் இவ்விடம் மறுபடி வாரமல்
திடமுடன் தடுக்கத் திருவருள் புரியாக்
கடவுளுக் கினிஎன் கைகூப் புவனோ?
நல்லோன் பிரேமன் நல்லுயிர் வாழின்
எல்லோர் தமக்கும் எத்துணை பயனும்!
அன்னவன் பொருட்டால் என்னுயிர் அளித்து
நன்மன நிறைவும நான்பெற் றமைவேன்!"

தியோ :—(முகம் சுளித்து) "ஓகோ! என்னே! உன்வாழ் வுனக்கு
நோவோ? வெறுப்போ? நுவலாய் எமக்கே."

தாம் :—(கோபத்தோடு)
"வெறுப்பே! வெறுப்பே! மறுப்பேன் அல்லேன்.
பொறுத்தல் ஆகாக் கொடுமை பழகிய
கறுத்தகல் நெஞ்சக் காவலன் காணினும்
அங்கவன் கையில் வெங்கோல் உணரினும்
வாழ்க்கையில் வெறுப்பு வாரா தொழியுமோ ?"

தியோ :—(தலையை அசைத்து) "நன்றே! நன்றே! நாளை முதலா
என்றும் காணாய் அவனை! இன்றே
உன்னுயிர் வாங்க உத்தர வளித்தேன்!"

பிரே :—(அரசன் முன்வந்து நின்று கும்பிட்டு)
மன்னரே! அவனை மன்னியும்! மன்னியும்!
தன்னுடை நண்பன் தலையை இழந்து
சாவது கருதி நோவது பெருகி
இரக்கம் எழுந்துபின் இப்படி யொழிந்தான்.
மறக்க வேண்டும், மன்னரே! அவன் பிழை!
பிரேமனும் எனக்கே பிராண தண்டனை
விதித்தீர். கொல்வீர். வேறென் எண்ணம்?
அவ்விதி ஏற்கவும் அன்பனை மீட்கவும்
இவ்விடம் வந்தேன்! 'இல்லை' யென்னுமல் என்
முடிவு காலத்தில் முழுமனத் தோடுநீர்
ஈதொரு வரமெனக் கீந்திடல் வேண்டும்!"

தியோ :—(கோப நகை நகைத்து)
"ஆகா! ஈவேன்! அரசன் ஆற்றலை
இழித்துக் கூறி எள்ளிய உங்களை
அழிக்கும் சாவினை அலட்சியம் செய்யும்
அஞ்சா நெஞ்சம் அமைந்த உங்களை
பொறுப்பேன்! விடுப்பேன்! பொறுப்பேன் நன்றாய்!"

தாம :—(அஞ்சாமல்)
"நல்லன பொறுத்தல் நாணமே உமக்கு?
உம்மன மகிழ்ச்சி ஒன்றின் பொருட்டே
இம்மெனத் தனதுயிர் இழக்கத் துணிந்து
திரும்பியும் வந்த தீரச் செயலால்
பிரேமனே வாழ்வைப் பெருமை படுத்தினன்.
உமது தயாவுக் குரியனும் ஆயினன்.
யானோ என்னில் என்னரும் துணைவனைக்
காப்பது கருதிக் கடியோய்! உமக்கே
மீளாச் சினத்தையும் மூட்டி மேன்மேல்
வலியறும் ஆணையாம் வலையினும் பட்டேன்!
என்னிடம் பெற்றதை ஏற்று நும்மனம்
ஓகை பெறுக, என் உயிரே கொள்க.

பிரே :—(மறுத்து) "கொள்ளீர் மன்னரே! கொள்க என்னுயிர்
பிரேமனை நுமக்குப் பிழையினைச் செய்தேன்.
இவ்வொரு உண்மை செவ்வையாய் நினைவீர்.
தகுதிஅன் றுநீர் தாமனை—"

தியோ.—(மூக்கின்மேல் விரலை வைத்து) "அந்தோ!
இங்கே காண்பதும் என்னே கேட்பதும்!
எங்கே உள்ளேன்? எங்கே உளேன் யான்?
எத்தனை துக்கம் எனக்கே! ஓகோ!
எத்தனை பெருமை இவர்போல் இருப்பது.

(தொடரும்)

சிவபெருமானும் செந்தமிழும்

[ஜீ. சதாசிவம் பிள்ளை]

ஊரும் பேரும் உருவுமில் லாதவன்
ஊருட் பேரு முருவமுந் தாங்கி
ஆதி சைவ அந்தண விருத்தனாய்
நாவலூ ராளியின் நறுமணம் தடுத்த
ஆவண வெழுத்தும் அந்தணர் முன்னர்ப்
பேசிய பேச்சும் பெருந்தமிழ்ப் பாஷையே
பித்த னென்றே பீடுறப் பாடென
அத்தன்மெய் யுருவுட னறைந்ததும் தமிழே
சித்த வடமெனும் திருமடா லயத்தில்
வீரட் டானொரு விருத்தவே தியனாய்
மலர்ப்பதஞ் சூட்டி மலர்ந்ததும் தமிழே
அம்பலத் தாடு மண்ணலெம் பெருமான்
ஆரூர் வாவென் றழைத்ததும் தமிழே
சுந்தரா நினது தோழன்யா மென்று
வன்மீக நாதர் மலர்ந்ததும் தமிழே
பரவையார் விவாகப் பண்பும் பின்னர்த்
தூது நடந்துபோய்ச் சொற்றதும் தமிழே
திருமுது குன்றம் செல்வழி ஏதெனக்
கூடலை யாற்றூர் கொணர்வழி கூறி

மறையவர் கோலம் மறைத்ததும் தமிழே
திருக்குருகாவூ செல்லும் வழியில்
பிராமண வடிவம் பீடுறத் தாங்கி
நீரும் சோறும் நிழலு மமைத்துப்
பசிதணி வித்த பாஷையும் தமிழே
திருக்கச் சூரிலே திருவமு தருத்த
ஐய ருருவொடு மந்தணரி லந்தொறும்
ஓட்டில்யா சித்தங் குரைத்ததும் தமிழே
சங்கிலி யார்பாற் றழைத்ததும் தமிழே
ஐயா றுடைய வடிகளோ வென்னக்
கன்றொன் றழைக்கக் கதறிய பசுப்போல்
ஓல மென்றிவ் வுலகெலாங் கேட்ப
உரைத்த மொழியு மொண்டமிழ் மொழியே
தில்லையில் வாழ்ந்த திருநீல கண்டர்
ஓட்டினை ஒளித்தங் குரைத்ததும் தமிழே
இயற்பகை மனையி லிசைத்ததும் தமிழே
அமர்நீதி பாலங் கறைந்ததும் தமிழே
மாறன் விருந்து வார்த்தையும் தமிழே

(தொடரும்)

வண்ணாரப் பெரியாண்டி

[க. ப. சந்தோஷம் B. A., L. T.,]

(௨௬௬-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களின் உரிமை வண்ணாருக்குள்ளும் எப்போதும் எல்லோராலும் பெரிதாகப் பாராட்டப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை என்று முன் பகர்ந்தோம். இதற்குச் சான்று இராமாயணத்திலுளது. யாதுபற்றியோ இல்லத்தை விட்டு வெளியே சென்று இராத்தங்கி வந்த தன் மனைவியை ஏற்றுக்கொள்ள மாட்டேனென்று விளம்பிய வண்ணானொருவனை யங்குக் காண்கின்றோம். விரிவிலா அறிவுடைய இச்சிறு மகன், இலங்கையில் இராவணன்பாற் சிறை யிருந்து மீண்டு வந்த சானகியைத் தன்

ளோடு சேர்த்துக்கொண்ட இராமனைப்போல் தான் ஆண்மை யற்றவனல்லன் என்று சினந்து கூறலானான். தன் மனைவியின்மீது இவன் ஐயங்கொண்டதைப் பற்றி இங்கு விரித்துப்பேச வேண்டியதில்லை. ஆனால் சீதையின்மேல் இவன் பழி சுமத்தியதை எளிதில் விடுக்கலாகாது. கணவனுடைய காவலின்றி ஒரு பெண் தனியே இருந்து தன் கற்பைப் பேணிக்கொள்ள முடியாதென்பது இவனுடைய கொள்கை என்று தெரிகிறது. ஆனால் கணவனை விட்டுப் பிரியாது, அவன் பார்வையை விட்டகலாது, கூண்டிலடைப்பட்ட குருவியைப் போலிருக்கும் ஒருத்தி கற்புடையவ ளாகி விடுவாளோ? இராமயண வண்ணனாகிய இவன் பெண்களைச் சற்றேனும் மதித்தானில்லை; கீழ்மகனாகிய இவன் வண்ணனாய்ப் பிறந்தது பெரிதும் வருந்தத்தக்கது. இவனுடைய சிறுமொழியைச் செவியுற்று உளங்கலங்கி சானகியை இராமன் காட்டிற்கனுப்பியது முறையாகுமோ என்ற கேள்வி அறிஞர் கருதுதற்குரியது. நிற்க.

வண்ணாரனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து, மேற்கண்ட இராமாயண வண்ணான் தங்கள் ஒழுக்கத்திற்கு மாறுபட்டு நடந்த கயவனென்றும், அவனைத் தங்கள் இனத்தைச் சேர்ந்தவனாக நினைக்கக்கூடாதென்றும் கூக்குரலிடுகின்றனர். அவர்கள் கூறுவதென்னவெனின்; "அழுக்கெடுத்துப் பிழைப்பதெங்கள் தொழில்; நீரும், நெருப்பும் உவர் மண்ணுங் கொண்டு கறைகளைப் போக்கி இழுக்கு வழுக்கற்ற நற்றொழிலைச் செய்து வருகின்றோம். பிறர்க்குப் பெரிதும் பயன்படு மொரு வேலையைக் காலை மாலை செய்து வயிறு வளர்க்கின்ற எங்களைக் குறுகிய அறிவுடையோர் இகழ்ந்தாலும் குற்றமறக் கற்ற பெரியோர் எங்களை நன்கு மதித்து அன்போடு நடத்தி வருகின்றனர். அவர்கட்கு நாங்கள் மிகுதியும் நன்றிபாராட்டுகின்றோம். அழுக்கு நீக்கி வெள்ளை செய்வதற்கு மாறாக நாங்கள் வெள்ளையை எடுத்து அழுக்குச் செய்வோமாயின் எல்லோருஞ் சேர்ந்து எங்களைப் புளியம் வளார் கொண்டு புடைக்க முன் வருவார்களென்பதில் ஐயமேயில்லை. இதுசரியே. வெள்ளையை எடுத்து அழுக்குச் செய்தல் எங்கள் மரபிற்கு முரண்பட்ட புன் செயலாகும். இராமாயண வண்ணான் எங்கள் தொழி

வின் உள்ளுறை பொருளையறியாத கசடன். காசுக்குதவாத இந்தப் பையல் மாசுமறுவற்ற ஒழுக்கமுடைய சீதையின்பேரிற் குற்றங் கூறியதால் வெள்ளையைக் கறைப்படுத்திய பழிக்காளானான். இதனால் எங்கள் குலத்திற்குக் கேடும், பெயருக்கு இழிவும் நேர்ந்தன. இவனை எங்களில் ஒருவனாக எண்ணுவது தவறு" என்பதே. இங்ஙனம் வண்ணார் சொல்வது ஒவ்வாதென்று எவர் விலக்கக்கூடும் ? இதுவரையில் நாம் வண்ணாருக்குக் கூறிய உயர்வெல்லாம் மிகையாகாதென்பது மேற்சொன்னவற்றால் வெளியாகின்ற தல்லவா ?

ஆனால், இராமாயண வண்ணான் மாண்டொழிந்து போனாலும், அவனுடைய வழியில் தோன்றிய பல்லாயிரம்பேர் இப்போது நானிலத்திருக்கின்றனர். இவர்கள் மற்ற வண்ணார்களுக்கஞ்சித் தங்கள் பழைய தொழிலைவிட்டு வேறு துறைகளிற் புகுந்து, சீர் கெட்ட தங்கள் முன்னோனுடைய வேலையைப் பெரும்பாலும் மறைவாகவும், வேளாவேளைகளில் வெளியாகவும் செய்து வருகிறார்கள். இவர்களிருக்கும் வரையில் வையகம் நன்னிலையடைய வழியில்லை.

ஒரு நாளிரவு பெரிய புகை வண்டிச்சாலை யொன்றில், சிற்றுண்டி விற்கு மிடத்தில், பிரயாணச் சீட்டுச் சோதகர்களிருவர் பேசிக்கொண்டிருந்தனர். இவர்களிலொருவன் புதிதாய் வேலையிலமர்ந்தவன் போலும், ஏனெனில், அவன் மற்றவனை விளித்து, "இன்று நான் பலவகையில் முயன்று பார்த்தும் ஐந்து அணாவிற்கு மேல் அகப்படவில்லை இந்த நாட்டுப்புறத்து ஜனங்களை எவ்வளவுதான் பயமுறுத்தினாலும் அரையணா, ஒரு அணாவிற்கு மேல் அவர்கள் அவிழ்த்துக்கொடுப்பதில்லை" என்றான். இதைக் கேட்ட அவனது நண்பன், "கைக்கூலி வாங்கப் பயப்பட்டால் ஒன்றும் நடவாது. கைக்கூலி வாங்காதவன் எவனிருக்கிறான் இந்த உலகத்தில்? ஆயிரத்தொகையாய் சம்பாதிக்கிறவன் நூற்றுக் கணக்காய் இலஞ்சம் பெற்றுக்கொள்ளுகிறான்; நூற்றுக் கணக்காய் சம்பளம் பெறுகிறவன் பத்து, இருபது இலஞ்சம் வாங்குகிறான்; இருபது, முப்பது சமபாதிக்கிற நாம் எட்டணா, பத்தணா வாங்கவேண்டியது தானே. இதில் தவறென்ன விருக்கி

றது?" என்று உறுதியாய் மொழிய, மற்றவன் இவனை மிகவும் வியந்து, "நீ சொல்வது உண்மை. எல்லாரும் இலஞ்சம் வாங்கு கிறவர்கள் தான் என்பதை நான் மறந்து விட்டேன்; நாம் ஏன் பயப்படவேண்டும்?" என்று தன்னைத்தானே தேற்றிக் கொண் டான். தன் மனைவி வெளியே சென்று வந்ததால் அவள் நெறி தவறி யிருக்கக் கூடுமென்பதைக் கொண்டு சீதையைக் கற்பழிந் தவளாக எண்ணிய இராமாயண வண்ணானைப்போல் மேற் குறித்த இருவரும் மக்களனைவருங் கைக்கூலி வாங்குகிறவர்களே என்று தீர்த்து விட்டார்கள். இங்ஙனமே, உலகில் உண்மை சொல்லுகிறவர்களில்லை, கற்புடைய மங்கையரில்லை, நியாயத் தைச் செய்கிறவர்களில்லை என்று பிதற்றித்திரியும் மக்கள் எண் ணிறந்தவர்க ளிருக்கின்றனர். இவர்களெல்லாம இராமாயண வண்ணானைச் சேர்ந்தவர்கள் தான். இப்படிப் பேசுகின்றவர்கள் தங்கள் சொற்களின் உண்மைப் பொருளை யறியாதவர்களென்றே சொல்லவேண்டும். பள்ளிக்கூட இறுதி வகுப்பு (School - final class) ஒன்றிற்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்த ஆசிரியர், மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் உங்கள் கல்வியை முடித்துக் கொண்டு உலகிற் சென்று அலுவல் பார்க்கும்போது உண் மையைப் பேசி நியாயத்தைச் செய்யவேண்டும்" என்றார். அப் போது வகுப்பிலிருந்த மற்ற மாணவரைக் காட்டிலும் கெட்டை யனு யிருந்த ஒருவன் எழுந்து, "ஐயா, இந்தக் காலத்தில் நியா யத்தைச் செய்கிறவர்கள் யாரிருக்கிறார்கள்?" என்று கேட் டான். இதற்கு மறுமொழியாக ஆசிரியர், "நீ எழுந்து இரண்டு மணி நேரம் நின்றுகொண்டிரு" என்றார்.

"நான் ஒன்றையுஞ் செய்யவில்லையே, ஐயா, என்னை இரண்டு மணிநேரம்நின்று கொண்டிருக்கும்படி கட்டளைகொடுக்கலாமா?"

"நீ ஒன்றையுஞ் செய்ய வில்லை, உண்மைதான். அதனு லென்ன ? இரண்டு மணி நேரம் நிற்பதால் நீ இறந்துவிட மாட் டாய். நில்"

"ஐயா, இது நியாயமா ?"

"உன்னுடைய மொழிப்படி உலகத்தில் நியாயஞ் செய்கிற வர்கள் ஒருவருமில்லை. அப்படியிருக்க நீ என்னிடம் வந்து நான்

நியாயஞ் செய்யவில்லை என்று முறையிடுவது விந்தையாயிருக்கிறது. உலகத்தில் நியாயமே கிடையாது என்கிறவன், தனக்கு மற்றொருவர் நியாயஞ் செய்யவில்லை என்று கூற இட முண்டோ" என்று ஆசிரியர் சொல்லி அந்தப் பிள்ளையாண்டானுக்கு அறிவூட்டினார். (தொடரும்)

தென்னிந்திய தமிழ்ச்சங்கம் திருநெல்வேலி

தனித் தமிழ்த்தேர்வுகள்

திருநெல்வேலி நகரில் 1924 ஜூனில் நிறுவப்பெற்றுள்ள தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார், நாளது 1926 ஜூன்மீ 28உ முதல் ஜூலை மாதம் 5உ வரை நடத்திய தனித்தமிழ்த் தேர்வுகளில், முதலாவதாகிய 'தமிழ்த் தேர்வு'க்கு விண்ணப்பித்துக் கொண்டவர் பன்னிருவர். தேர்வுக்கு வந்தெழுதியவர் அறுவர். தேர்ச்சியுற்றவர் இருவர். இரண்டாவதாகிய 'இளந்தமிழ்ப் புலவர்' தேர்வுக்கு விண்ணப்பித்தவர் ஒருவர். இவர் தேர்வுக்கு வந்தெழுத வில்லை. மூன்றாவதாகிய 'தமிழ்ப் புலவர்' சிறப்புப்பட்டத் தேர்வுகளில், தமிழ்ப்புலவர் காப்பியத்துக்கு விண்ணப்பித்தவர் இருவர். இவரில் எழுதினவர் ஒருவர், தேர்ச்சியுற வில்லை. தமிழ்ப்புலவர் சங்க நூலுக்கு விண்ணப்பித்தவர் ஒருவர். இவர் எழுதித் தேர்ச்சியுற்றுள்ளார். தமிழ்ப் புலவர் இலக்கணத்துக்கு விண்ணப்பித்தவர் ஒருவர். எழுதினார், தேறவில்லை. இத்தேர்வுகட்கு இந்தியாவிலும் இலங்கை முதலிய வெளியிடங்களிலும் பயின்றுவரும் மாணவர்கள் பலருளர். முதல் முதலாக நடைபெற்ற இந்த ஆண்டில் வந்தெழுதக் கூடாமற் போயினும், மேல் வரும் யாண்டில் நூற்றுக்கணக்கான மாணவர் வந்தெழுதித் தேர்ந்து பெருமையும் புலமையும் எய்துவார்களென்று நம்பப்படுகிறது.

தேர்ச்சிக் குறிப்பு

தமிழ்ப் புலவர்

பதிவெண் (சங்க நூல்) 3-வது வகுப்பு

15—ஞா. தேவநேசப்பாவாணன்,
தமிழாசிரியர், கிறித்தவகலா சாலை, சென்னை.

தமிழ்த் தேர்வு

3-வது வகுப்பு

2.—ஆ. ஜெயரத்னம், குறும்பலாப் பேரி
பாவூர்ச்சத்திரம், திருநெல்வேலி.

5.—யோ. தங்கசாமி பாண்டியன்,
குறும்பலாப்பேரி, பாவூர்ச்சத்திரம், திருநெல்வேலி.

பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.